KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

# வலு

யூலை – செப்ரெம்பர் – 2021 காலாண்டிதழ் இதழ் – 31

**மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை**

ரூபா 120/=



ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

04 ஒரு சக்கர நாற்காலிச் சாதனையாளர் -ஞானா-
42 முற்றத்து மல்லிகை



எவர் எப்படி நடந்துகொண்டாலும் எமது பாதையில் மனவுறுதியுடன் செல்வதே எமக்கு முன்னேற்றத்தைத் தரும்.

ஆறுமுகம் பரமேஸ்வரன்



ISSN 2513-2989
9 772513 298007

வெளியீடு :
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2773-6865

# அறிந்திரன்

சிறுவர் சஞ்சிகை

இதழ்-05
மே-யூன்-யூலை
2021

20/-




**சிவானி**
தற்போது
**மகிழ்ச்சியாக**
இருக்கிறாள்.

"துப்பாக்கியிலிருந்து வெளி யேறும் தோட்டாவை விட வீரியமானஆயுதம் புத்தகம்"
- மார்டின் லூதர்கிங்

உன்னிடம் எதையும் எதிர்பார்க்காமல் தன்னை முழுமையாக உனக்கு அர்ப் பணிக்கும் நண்பனே புத்தகங்கள்.
- அமெரிக்க கவிஞர் லாங்பெலோ



**உலக புத்தக தினம்**
**ஏப்ரல் – 23**



தவளையாரே !

## அறிந்திரு அதுவே அருந்திரு

அறிந்திரன்
சிறுவர் சஞ்சிகை
**மாத இதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

யூலை - செப்ரெம்பர் , 2021 காலாண்டிதழ் இதழ் – 31

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களையும்
பொது விடயங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை


**பிரதம ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**நிர்வாக ஆசிரியர்**

திரு. கணபதி சர்வானந்தா
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)

**இதழ் குழு ஆலோசகர்**

திரு. க. தர்மசேகரம்

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திருமதி.சு. சுபோதினி

**உதவி ஆசிரியர் குழு**

திருமதி ஹே. லுசிந்தன்
திருமதி சி. வசந்தன்
செல்வி லோ. டனுசிகா



**வெளியீடு**

**கருவி மாற்றுத் திறனாளிகளின்**
**சமூக வள நிலையம்,**
இல. 290, பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
தொலைபேசி : 021 205 4224


## பொருளடக்கம்


எண்ணக் கிண்ணம் - கவிதை - 02

செவிக்கோர் செய்தி - 03

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 04
*ஞானா*

வலுவிடம் கேளுங்கள் - 07

வலைவெளி ஓட்டிசம் (Autism) - 08
*பாலபாரதி*

செய்திச் சாளரம் - 10

தசரசம் - 11

எழுதுங்கள்; வெல்லுங்கள் - 33

முற்றத்து மல்லிகை - 34

மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா? நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்! - 38


சிறுகதை - 40

கண்கள் காணும் மௌன மொழி- 43


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதன்

# வானம் வசப்படும்



மனிதா!
உன் நம்பிக்கைச் சிறகை விரித்தெழு.
வானம் வசப்படும்.
நட்சத்திரங்கள் வரவேற்கும்.
நிலாத்தட்டில் சோறுண்ணலாம்- வா!

கால்கள் காலமானதேயென்று- கலங்காதே
செயற்கைக் காலோடு எவரஸ்ரைத் தொட்ட
அருணிமாவை நீ பார்க்கவில்லையா!
அப்படியானால் உன்னால் ஏன் இது முடியாது- எழுந்து வா
உலகம் உனை வரவேற்கக் காத்திருக்கின்றது.

கைகள் கைவிட்டதேயென்று - கண்ணீர் சிந்தாதே.
இரு கைகளின்றி விமானம் செலுத்திய
ஜெசிக்காவின் வரலாற்றை நீ படிக்கவில்லையா?
அப்படியானால் உன்னால் ஏன் இது முடியாது?
நம்பிக்கையோடு வெளியில் வா
உலகம் உன்னை அணைக்க காத்திருக்கின்றது.

பார்வை பறிபோனதேயென்று- பதற்றம் அடையாதே.
பார்வையற்ற அமைச்சரான
டேவிட் பிளங்கற்றை நீ அறியவில்லையா
அப்படியானால் உன்னால் ஏன் இது முடியாது- பறந்து வா
உலகம் உனக்குக் கை கொடுக்கக் காத்திருக்கின்றது.

செவிகள் செயலற்றுப் போனதேயென்று- சோர்ந்து விடாதே
இப்பாதிப்போடு ஒலிம்பிக் பதக்கம் வென்ற
டெரன்ஸ் பார்கினை நீ கேள்விப்படவில்லையா?
அப்படியானால் உன்னால் ஏன் இது முடியாது- நீந்தி வா
உலகம் உன்னை அணைக்க காத்திருக்கின்றது.

ஓட்டிசம் ஒட்டிக் கொண்டதேயென்று- ஒதுங்கி விடாதே
இப்பாதிப்போடு விரிவுரையாளரான
டெம்பிள் கிராண்டினின் வரலாற்றை நீ கற்கவில்லையா?
அப்படியானால் உன்னால் ஏன் இது முடியாது- ஓடி வா!
உலகம் உனக்கு கை கொடுக்கக் காத்திருக்கின்றது.

மனநலிவு வந்ததேயென்று- மயங்கி விடாதே.
இக்குறைபாடோடு ஆசிரியையான
நோலியா கரெல்லாவை நீ காணவில்லையா?
அப்படியானால் உன்னாலேன் இது முடியாது- துள்ளி வா.
உலகம் உனைத் தழுவக் காத்திருக்கின்றது

உடல் அங்கங்கள் செயலற்றுப் போன போதும்
இந்த அண்டத்தின் செயற்பாடுகள் பற்றி அறிந்து சொன்ன
ஸ்டீபன் வில்லியம் ஹாக்கினை அறியாதவர்கள் யாருமில்லை.

உள்ளம் ஊனமாகாத வரை- சாதனை தூரமில்லை
பயம் பதற்றப்படுத்தினாலென்ன?
தோல்விகள் தொடர்கதையானால் என்ன?
வெட்கம் வேதனைப்படுத்தினாலென்ன?
இவற்றையெல்லாம் முறியடிக்க
நம்பிக்கைச் சிறகை விரித்து
முயற்சிக் காற்றில்- உயர எழு!
வானம்வசப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவிக்கோர் செய்தி

செப்ரெம்பர் இறுதி ஞாயிறு சர்வதேச செவிப்புலனற்றோர் தினம். மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுத் திறனாளிகள் தினம், வெள்ளைப் பிரம்பு தினம், ஓட்டிச தினம், டவுண்சிம்ரோம் தினம், உளநல தினம் என்பன கொண்டாடப்படுகின்ற அளவிற்கு இத்தினம் கொண்டாடப்படாமை இச்சமுகத்தினரின் முன்னேற்றத்தினைப் பெரிதும் பாதிக்கின்றதுஎன்றுதான் சொல்ல வேண்டும்.

சர்வதேச தினங்கள் ஒவ்வொன்றும் கொண்டாடப்படுவதன் நோக்கம், குறித்த விடயம் தொடர்பான விழிப்புணர்வைச் சமூகத்தில் ஏற்படுத்துதல் ஆகும். இந்த வகையில் செவிப்புலனற்றோர் தினம் பெரிதும் கொண்டாடப்படுகின்றபொழுது இச்சமுகத்தினர் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் அதிகரிக்கும். அத்துடன் இவர்களின் வாழ்க்கையும் உயர்வடையும்.

இன்று செவிப்புலனற்றோர் வாழ்வில் பிரச்சினைகள் நிறையவே காணப்படுகின்றன. பல சவால்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை வென்று தமது வாழ்க்கைப் பயணத்தை இவர்கள் தொடர்கின்றனர். இச்சமூகத்தினர் சைகை மொழிமூலம் தங்கள் உரையாடல் களினை மேற்கொள்கின்றனர். இவர்கள் சமூகத்தினருடன் தொடர்பாடல்களினை ஏற்படுத்தும்பொழுது பொதுமக்களுக்குச் சைகை மொழி தெரியாமை பெரும் இடர்பாட்டை ஏற்படுத்துகின்றது.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை நாடித் தமக்கான தேவைகளைப் பெற்றுக் கொள்வதிலும் இவர்கள் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். சைகை மொழி தெரிந்த ஒருவர் அங்கு இல்லாமையால் இவர்கள் தங்கள் பிரச்சினைகளை உரியவர்களுக்குத் தெரியப்படுத்தி உரிய தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனவே, பொதுமக்களுக்கான சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களில் சைகை மொழி தெரிந்த ஒருவர் இருப்பது இச்சமூகத்தினரின் ஆரோக்கியத்தினை மேம்படுத்த உதவும்.

வானொலி, தொலைக்காட்சியூடாகப் பரிமாறப்படும் செய்திகளினை இவர்களால் புரிந்து கொள்ள முடியாது. இதனால் செய்திகளைப் புரிந்து கொள்வதற்கு இன்னொருவரின் உதவியே தேவைப்படுகின்றது. இது காலதாமதங்களினையும் ஏற்படுத்துகின்றது. எனவே, செய்திகளுக்கான தொலைக்காட்சி அலைவரிசைகளேனும் ஒரு நாளில் குறைந்த பட்சம் பத்து நிமிடத்தினையேனும் இவர்களுக்காக சைகை மொழியில் செய்திகளை ஒளிபரப்ப முன்வந்தால் இச்சமூகத்தினர் பெரிதும் பயனடைவர். இது இவர்களின் வாழ்விலும் பல புதிய மாற்றங்களை உருவாக்கும்.

ஒருவர் தமது மனச்சுமைகளினை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்ளும் பொழுது குறைவதாக எண்ணுகின்றனர். ஒருவருடைய ஆரோக்கியமான வார்த்தைகள், செயற்பாடுகள் என்பனவே சமூகத்தின் ஆரோக்கியத்தினைத் தீர்மானிக்கின்றது. எனவே, செவிப்புல மாற்றுத் திறனாளிகளுடன் எமக்குத் தெரிந்தளவு சைகைகளினைப் பயன்படுத்தியேனும் உரையாட வேண்டும். அத்துடன் தங்களுக்கு வேண்டிய உதவிகளையோ அல்லது தேவைகளையோ பெற்றுக்கொள்வதற்காக வரும்போது நிறுவனங்களாயினும் சரி, வியாபார நிலையங்களாயினும் சரி, மருத்துவ மனைகளாயினும் சரி, பொதுப் போக்குவரத்து வாகனங்களாயினும் சரி, பொது இடங்கள் உள்ளிட்ட இடங்கள் எங்காயினும் சரி இவர்களுக்கு நாம் எம் இயலுமைக்கு உட்பட்ட வகையில் உதவிகளை வழங்கி இவர்களின் வாழ்வையும் ஆரோக்கியப் படுத்துவது சமூகத்தினர் செய்யும் நல்ல காரியங்களில் ஒன்றாக அமையும்.

**திரு. நா. கீதா கிருஷ்ணன்**
பிரதம ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

ஞானா



## ஒரு சக்கர நாற்காலிச் சாதனையாளர்...

துன்பம் வரும் காலங்களில் தளராமல் முன்னோக்கிச் சென்றால் நமது கஷ்டங்கள் முள்கிரீடமாக அல்லாமல் பட்டுமெத்தையாக மாறும் என்பது என் வாழ்க்கை அனுபவமாகும்" என்கிறார் பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ள கே.வி. ராபியா.

இவருக்கு வழங்குவதன் மூலம்.... பத்மஸ்ரீ விருதுக்கே பெருமை என்கின்றனர் சமூக மேம்பாட்டாளர்கள்.

குடியரசு தினத்தை முன்னிட்டு இன்று பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய நபர்களுக்கு பத்ம விருதுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. அதில் கேரள மாநிலம் மலைப் புறத்தை சேர்ந்த கே. வி. ராபியாவும் ஒருவர்... வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஏற்பட்ட சோதனைகளைத் தைரியத்துடன் எதிர்கொண்டு சக்கர நாற்காலியில் சுற்றி வந்து அதையே சாதனைகளாக்கியவர் கே.வி. ராபியா.

மலப்புரம் மாவட்டத்தில் திருரங்காடி அருகில் உள்ள வெள்ளிலக்காடு என்னும் குக்கிராமத்தில் 1966 இல் பிறந்த ராபியா தனது அர்ப்பணிப்புடன் கூடிய சேவையால் அந்த மாவட்டத்தின் தனித்த அடையாளமாக மாறியவர்.

பள்ளிப்படிப்பைப் பூர்த்தி செய்து 17ஆம் வயதில் கல்லூரியில் முதலாம் ஆண்டில் சேர்ந்த நேரத்தில் ஏற்பட்ட திடீர் உடல் சுகவீனம் போலியோவாக மாறியதால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டார்.

பெற்றோரும், உறவினர்களும் கல்லூரிப் படிப்பைக் கைவிடக் கூறியும் விடா முயற்சியுடன் சக்கர நாற்காலியில் பயணித்துப் பட்டதாரி ஆனவர் ராபியா.

வீட்டில் ஓய்வாக இருந்த நேரத்தில் அருகில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்க ஆரம்பித்த ராபியாவின் முயற்சியே, பிறகாலத்தில் அவருக்குத் தேசிய அளவிலான அங்கீகாரங்களைத் தேடித் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது டியூசன் சென்டரை அறிவொளி இயக்கத்தின் மையமாக மாற்றிய ராபியா திரூரங்காடி பகுதியில் உள்ள கிராமங்களில் சக்கர நாற்காலியில் பயணித்து முதியோர் கல்வியை ஊக்குவித்து அரசின் கல்வித் துறையால் ஏற்படுத்த முடியாத கல்விப் புரட்சியைக் குறுகிய காலத்தில் நிகழ்த்தி 1990ஆம் வருடம் மலப்புரம் மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்ற மாவட்டமாக மாற்றிடக் காரணமானவர்.

தனது சேவைகளுக்கு அடையாளமாக 'சலனம்' எனும் தொண்டு நிறுவனத்தைத் ஆரம்பித்த ராபியா மாற்றுத் திறனாளிகள், மூளை வளர்ச்சி குன்றிய மாணவர்களுக் கான சிறப்புப் பள்ளிகளும் நடத்தி வருகிறார். அந்த அமைப்பானது மகளிர் சுய உதவிக் குழுக்கள், கைத்தொழில் பயிற்சி மையங்கள், சுகாதார விழிப்புணர்வுத் திட்டங்கள் எனப் பலவற்றை நடத்தி வருகிறது.

ஏற்கனவே சக்கர நாற்காலியில் பயணித்து வந்த நிலையில் 2000ஆம் ஆண்டு ராபியாவை புற்றுநோய் தாக்கியது. அதற்காக கீமோதெரபி சிகிச்சை மேற்கொண்டு ஓரளவு குணமடைந்த ராபியா, பிற புற்றுநோயாளி களுக்கு நம்பிக்கையூட்டும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தி வந்த நிலையில் அடுத்த சோதனையை எதிர்கொண்டார்.

2004 இல் வீட்டில் கழிவறையில் வழுக்கி விழுந்து முதுகு தண்டுவடம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுக் கழுத்துக்கு கீழே அசைவில்லாத நிலையில் படுத்த படுக்கையிலும் தான் பயிற்றுவித்த 100 தொண்டர்கள் மூலம் தனது சேவைகளைத் தற்போது வரை தொடர்ந்து வருகிறார்.

இவரது சேவைகளுக்கு அங்கீகாரமாக 1994ஆம் ஆண்டு தேசிய இளைஞர் விருது, பெண் கல்வி ஊக்குவிப்பைப் பாராட்டி 2001இல் சக்தி புரஸ்கார் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ள ராபியா தனது சுயசரிதையை "மவுன வேதனைகள்" என்ற புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

உடல் அசைய மறுத்தாலும் ஊக்கம் குறையாது பத்மஸ்ரீ வரை சென்ற தன்னம்பிக்கையாளர் என், கே. வி. ராபியாவைப் பாராட்டுகின்றார். மத்திய அரசின் பத்மஸ்ரீ விருதுக்குத் தேர்வாகி யிருக்கும் அவர் அந்த விருதுக்குப் பொருத்த மானவர் எனக் கேரள மக்கள் கொண்டாடு கிறார்கள். 56 வயது ஆன பின்பும் சக்கர நாற்காலியில் சுழன்றபடி எழுத்தறிவிக்கும் புனிதப் பணி மட்டுமல்லாது, வாழ்க்கையில் துவண்டவர்களைக் கைதூக்கி விடும் ஏணி யாகவும் செயல்படுகிறார். மக்கள் பணி செய்ய இறைவன் கொடுத்த வரம் இந்த விருது என்கிறார் ராபியா. மக்கள் சேவைக்காக கே.வி. ராபியா பயணித்துக் கொண்டிருப்பது முள்பாதை என்பது கேரள மக்கள் அனைவரும் அறிந்த விடயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேரளத்தின் மலப்புறம் மாவட்டம் திரூரங்காடியை அடுத்த வெள்ளினக்காட்டுப் பகுதியைச் சேர்ந்த மூசாக்குட்டி - பிய்யாச்சு குட்டி ஆகியோரது ஆறு மகள்மாரில் ஒருவர் தான் கே. வி. ராபியா. திரூரங்காடி அரசுப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் போது உடலில் தளர்வு ஏற்பட்டது. அச் சமயத்தில் அப்பாவின் தம்பி அவரை சைக்கிளில் ஸ்கூலுக்கு அழைத்துச் சென்றார். ப்ரீ டிகிரி படிப்பதற்காக திரூரங்காடி பி. எஸ். எம். ஓ கல்லூரியில் சேர்ந்தார். தேர்வுக்கு ஆறுமாதம் முன்பே ராபியாவின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி செயலிழந்து, முற்றிலும் இயக்கத்தை இழந்தது.

ரெகுலர் கிளாசுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதால் திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்றார் கே. வி. ராபியா. அரசு எழுத்தறிவு இயக்கம் தொடங்குவதற்கு முன்பே ராபியா தன்னைச் சுற்றியுள்ளவர் களுக்கு எழுத்துச் சொல்லிக் கொடுத்தார். கடிதங்கள் எழுதும் அளவுக்கு அவர்களை தயார்படுத்தினார். இவரது பணி அனைவரா லும் பாராட்டப்பட்டது.

இந்த நிலையில்தான் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். திருச்சூரில் உள்ள அமலா கேன்சர் செண்டரில் சிகிச்சை எடுத்துக் கொண்டவர் அங்குள்ள சக நோயாளிகளுக்கு நம்பிக்கை ஊட்டினார். சமூக சேவைக்காக 'சலனம்' என்ற டிரஸ்ட் ஆரம்பித்து 'முதியோருக்கு எழுத்தறிவித்தல்' நூலகம் மூலம் வாசிப்பை ஊக்கப்படுத்துதல், மேலதிக வகுப்பு நடத்துதல் மற்றும் மாற்றுத் திறனாளிகள், பெண்கள் முன்னேற்றத்துக் காகப் பல்வேறு செயற்பாடுகளை நடத்தி வருகிறார்.

மலைப்புறம் மக்கள் குடும்ப பிரச்சினை களுக்குத் தீர்வு சொல்வதும் ராபியாவின் வீட்டில்தான். "அனைத்து பிரச்சினைக்கும்



தீர்வு காணும் சந்தோஷம்தான் என் வாழ்க்கைப் பாதையின் வெளிச்சம்" என அடிக்கடி சொல்லுவார் ராபியா. எழுத்தறி விக்கும் பணிக்காக 1993இல் தேசிய இளையோர் விருது கே. வி. ராபியாவுக்கு வழங்கப்பட்டது. இப்போது உடலில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் அதையும் தாண்டி சேவை செய்து வருகிறார்.

வெள்ளினக்காட்டில் தனது சகோதரியின் பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் கே.வி.ராபியா பல நூல்களை எழுதியிருக் கிறார். 'சலனம்' பப்ளிகேசன் மூலம் வருவாய் ஈட்டி, அதைப் பொது நலனுக்காகச் செலவு செய்கிறார். கே.வி. ராபியா தனது சுயசரிதையான 'ஸ்வப்னங்களுக்கும்' 'சிறகுகள் உண்டு' என்ற புத்தகம் நம்பிக்கை ஊட்டுவதாக அமைந்துள்ளது. பத்மஸ்ரீ விருது கிடைத்தது பற்றி கே.வி.ராபியா கூறுகையில், "தோல்விகள் மட்டுமே என் வாழ்க்கையின் அடையாளமாக மாறிப் போனது. அது கேரளத்தில் என்னை அறிந்த வர்களுக்குத் தெரியும். பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டங்களை நான் கடந்து வந்திருக்கிறேன். என் வாழ்க்கையில் என்றுமே போராட்டங்கள் தான். மற்ற ஆண்டுகளைவிட 2021 ஆம் ஆண்டு துயரம் மிகுந்ததாக அமைந்து விட்டது. எனக்கு முதுகெலும்பு வலி அதிகரித்து, அசைய முடியாத சமயத்திலும் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அடுத்ததாக கேன்சரால் பாதித்த வயிற்றில் பிரச்சினை ஏற்பட்டது. இதனால் சோறுமட்டும் சாப்பிட முடிகிறது. மஞ்சள், கறிவேப்பிலை போன்ற மருந்து வகைகளை "ஜ்சாக" குடிக்கிறேன்.

என் வீட்டில் நான்கு மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கொரோனாவால் எனது இரு தங்கைமாரும், எனது மாமியார் மற்றும் சகோதரியின் கணவர் ஆகியோர் இறந்துவிட்டனர்.

கொரோனாவால் எனக்கு வருவாய் தரும் புத்தக விற்பனையும் குறைந்து விட்டது. ஆனாலும் நான் தளரவில்லை. என் வீட்டில் உள்ளவர்களின் கைகளையும், கஷ்டம் என என்னைக் காண வருபவர்களின் கைகளையும் பிடித்துக்கொண்டு முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றேன். அதற்காகத்தான் இந்த விருது கிடைத்துள்ளது. மோசமான ஓர் ஆண்டை நான் கடந்ததற்காகவும், சமூகத்தின் உதவி இருந்தால்தான் மட்டுமே முன்னோக்கிச் செல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்ட சமயத்தில்தான் இறையருளால் இந்த விருது எனக்கு கிடைத்துள்ளது. விருது கிடைத்ததால் என் பொறுப்பு இன்னும் அதிகரித்துள்ளது" எனக் கூறும் கே. வி. ராபியா, "துன்பம் வரும் காலங்களில் தளராமல் முன்னோக்கிச் சென்றால் நமது கஷ்டங்கள் முள்கிரீடமாக அல்லாமல் பட்டுமெத்தையாக மாறும் என்பது என் வாழ்க்கை அனுபவமாகும்" என்கிறார் நம்பிக்கையுடன். •



## வலுவிடம் கேளுங்கள்



- **எமது கிராமத்தில் இருக்கும் ஒருவரது குடும்பத்தில் உள்ள மூன்று பிள்ளைகளில் ஒரு பிள்ளை உளவளர்ச்சி குறைபாடுடையவர். அவருக்கு பத்து வயது இருக்கும். இன்னும் பாடசாலை செல்லாமல் இருக்கின்றார். பெற்றோர்களும் இவருக்கான கல்வியைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான விளக்கமின்றி இருக்கின்றனர். இப் பிள்ளைக்கு எவ்வாறு உதவ முடியும்?**

மிதுலன் வவுனியா

- முதலில் சமூக அக்கறையோடு இந்தக் கேள்வியைத் தொடுத்ததற்கு தங்களுக்கு வலுவின் நன்றிகள். பிள்ளையின் விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பே நிலையான பலனைத் தரும். எனவே, இப்பிள்ளைக்குக் கல்வி வழங்கப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தினைப் பெற்றோருக்குப் புரியச் செய்யுங்கள். வீட்டிற்கு அருகாமையில் உள்ள விசேட கல்வி அலகுள்ள பாடசாலையில் பிள்ளையை இணைப்பதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். வலுவிழப்புடன் கூடிய நபர்களுக்காகப் பணியாற்றுகின்ற நிறுவனங்களோடு பெற்றோரைத் தொடர்புபடுத்தி விடுவதும் நல்ல பலனைத் தரும். அவர்களது வாழ்விடம் அமைந்துள்ள பிரதேசச் செயலகத்திலுள்ள பெண்கள், சிறுவர் மற்றும் சமூக சேவைப் பிரிவு ஆகியவற்றோடு தொடர்புகொண்டு அங்கு பணியாற்றும் அதிகாரிகளின் உதவியை பெற்றுக்கொள்ள ஊக்கமளியுங்கள். இவற்றினூடாக இக்குழந்தைக்குப் பொருத்தமான கல்வியினை வழங்க முடியும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைவெளி

(கடந்த இதழின் தொடர்ச்சி)

# ஓட்டிசம்

பாலபாரதி

## பெற்றோர்களுக்கான 100 யோசனைகள்

1. உண்மையை ஒப்புக்கொள்ளுவோம்.

அனேக பெற்றோர் தங்கள் குழந்தைக்கு ஓட்டிசம் என்று தெரிந்தும் அப்படியெல்லாம் இல்லை. என் பிள்ளைக்கு வெறும் ஹைப் பர்தான், லேர்னிங் டிசபிலிட்டி மட்டுந்தான் என்றெல்லாம் பிறரிடமும் தம் மனதுக்கும் நிறுவ முயற்சிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

2. உரக்கச் சொல்வோம்

நாமே முன்வந்து பிள்ளையின் குறை பாட்டை வெளிப்படையாகப் பேசுவது நல்லது. அக்கம் பக்கத்தவர் தொடங்கி, ரயில் ஸ்நேகம் வரை அனைவரிடமும் நம் பிள்ளைக்கு இருக்கும் வளர்ச்சிக் குறைபாட்டினை நாமே முன் வந்து சொல்லிவிடுவது சரியாக இருக்கும்.

3. அஞ்சிச் சுருங்காதிருப்போம்.

பிள்ளைக்கு இருக்கும் குறைபாட்டினைக் குறித்த தாழ்வுணர்ச்சியிலிருந்து நாம் வெளிவந்தால் மட்டுமே பொது இடங்களில் பிள்ளையின் செயற்பாடுகள் குறித்து அவ மான உணர்வு அடையாதிருக்க முடியும்.



4. போராடத் தயாராவோம்.

இப்படி ஒரு நிலை வந்துவிட்டதே என்று மறுக்காமல் இருப்பது அவசியம். அது போலவே, அடுத்தவர்கள் நமக்காகப் பேச வேண்டும் என்று நினைக்காமல், பள்ளி தொடங்கி எல்லா இடங்களிலும் நாமே நமக்காகப் பேச முயற்சிப்போம். இப் போராட் டங்களில் சக சிறப்புக் குழந்தைகளின் பெற்றோர்களையும் ஒருங்கிணைக்க முயற்சி செய்வது என்பது சமூக மாற்றத்திற் கான குரலுக்கு வலுச் சேர்க்கும் என்பதை உணர்ந்து கொள்வோம்.

5. பகிர்ந்து கொள்வோம்.

நம் பிள்ளைக்கு நாம் கொடுத்துவரும் பயிற்சிகளினூடாக, நமக்குப் பயனளிக்கும் ஒவ்வொரு சின்னச் சின்ன விஷயங் களையும் ஏனைய பெற்றோருக்கும் தயக்க மின்றிப் பகிர்வது நமக்கும் கூட நன்மை யையே தரும். பிறரின் அனுபவங்களை நாமும் முயற்சித்துப் பார்க்கலாம்.



6. ஒப்பிடாதிருப்போம்.

இப் பிரச்சினை இங்கே கொஞ்சம் அதிகம் தான். ஓட்டிசநிலையின் தன்மை என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் வேறுபடும். இதனைப் பல பெற்றோர் உணர்ந்து கொள்வதில்லை. அந்தப் பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுதே; இந்த பிள்ளை எழுதுகிறதே என ஓர் ஓட்டிசநிலைக் குழந்தையைத் தனது பிள்ளையோடு ஒப்பிடாமலிருப்பதும் அவசியம்.

7. டைரி எழுதுவது.

உணவுக் கட்டுப்பாடு தொடங்கி, பிள்ளைகளின் நடத்தைப் (பிகேவியர்) பிரச்சினைகள், நம்முடைய மனஅழுத்தங்கள், குழந்தையின் முன்னேற்றங்கள் (மிகச் சிறு விஷயமா இருந்தாலும் கூட) முதலியவற்றைப் பதிந்து வைப்பது நமக்கும், மற்றவருக்கும் பயன் தரும்.



8. சிறிய மனிதர்களை அங்கீகரித்தல்.

நம் பிள்ளைகளின் பள்ளி ஆயா, ஆட்டோக்காரர், சலூனில் குழந்தைக்கு முடி திருத்துவோர் போன்ற ஆட்களில் சிலரேனும் நம் குழந்தைகளைப் புரிந்து, அவர்களுக்கு மதிப்பளித்துச் சேவை செய்திருப்பர். அவர்களை வாய்ப்புக் கிடைக்கையில் எல்லாம் பாராட்டவும், உதவவும் முயற்சியுங்கள். இவர்களின் ஆதரவும் அரவணைப்புமே நம் குழந்தைகளுக்கு அவசியம்.

9. பயணங்களுக்குத் தயங்காதீர்கள்.

பொதுவாகவே பயணம் என்பது எல்லா மனிதர்களுக்குமே மகிழ்வளிக்கக்கூடியது தான். அதிலும் குறிப்பாக பல ஓட்டிச நிலையாளர்கள் பயணங்களை விரும்புகிறவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் நமக்குத்தான் இவர்களை வைத்துக் கொண்டு பயணிப்பது கடினமான முயற்சி. ஆனால் இதன் பலன் மிகப் பெரிதாகவே இருக்கும். பயணங்களினூடாக புதிய புதிய விஷயங்களை அறிமுகப்படுத்திக் கொண்டே போனால், அவர்களும் உள்வாங்கியபடியே இருப்பார்கள். பயணங்கள் வாயிலாக பெருகும் குழந்தைகளின் அறிதலும், மகிழ்ச்சியும் அலாதி.



10. அன்பின் எல்லைகளை விஸ்தரிப்போம்

நிறைய ஓட்டிசநிலைச் சிறார்களின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை (குழந்தையின் நிலை பொறுத்து) சிறப்புப் பள்ளிகளுக்கு அனுப்ப மறுப்பதன் காரணமே அங்கிருக்கும் பிற குழந்தைகளிடமிருந்து எதையாவது கற்றுக்கொண்டு விடுவானோ? என்ற அச்சம்தான் முக்கியமானதாக இருக்கிறது. அப்படிக் கற்றுக்கொள்ளக்கூடிய குழந்தையாக இருக்கும் பட்சத்தில் எளிதாக ஓட்டிசநிலையிலிருந்து அக்குழந்தை வெளியே வந்துவிடும் என்பதை உணர வேண்டும். மேலும் ஓட்டிசத்தினைவிட மற்றவகை மனநலம் பாதிப்புள்ள குழந்தைகள் மோசம் என்று நினைக்காமல் இருப்பது அவசியம். நாம் மற்ற மனநலக் குறைபாடுள்ள குழந்தைகளிடம் காட்டும் இதே மனநிலையைத் தான் பிற குழந்தைகளின் பெற்றோர் நம்மிடமும் காட்டுகிறார்கள். அங்கே அந்தப் புறக்கணிப்பின் வலியை உணரும் நாமே, பிறிதோர் இடத்தில் பிள்ளைகளின் குறைபாட்டில் உயர்வு, தாழ்வு காணலாகாது. அன்பின் எல்லைகளை விரிவடையச் செய்வோம். எல்லாச் சிறப்பியல்புக் குழந்தைகளிடமும் ஒரே மாதிரியான அன்பு செலுத்துவோம்.

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாளரம்

## சைகை மொழியில் ஒளிபரப்பு



இலங்கையில் 2022ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் பசில் ராஜபக்ச அவர்களினால் சமர்ப்பிக்கப் பட்டது.

வழமையாக, தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளில் நேரடியாக வரவு செலவுத் திட்ட சமர்ப்பிப்பு மற்றும் விவாதங்கள் ஒளி, ஒலி பரப்பப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இந்நிகழ்வினைச் செவிப்புல மாற்றுத் திறனாளிகள் புரிந்து கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இம்முறை இந்நிகழ்வினைச் சைகை மொழியிலும் ஒளிபரப்பு செய்வதற்கு பாராளுமன்ற அனுமதி பெறப்பட்டது. இதற்கமைய நேரடி ஒளிபரப்பு செய்யும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் சைகை மொழியில் ஒளிபரப்புச் செய்வதற்கெனச் சிறிய கட்டம் ஒதுக்கப்பட்டது. இதனூடாக நேரடி ஒளிபரப்பின்போது இம்முறை சைகை மொழியிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டது. இதனூடாகச் செவிப்புல மாற்றுத்திறனாளிகள் இந்நிகழ்வை நேரலையி லேயே கண்டு அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற முடிந்துள்ளது. இது இவர் கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பராலிம்பிக்கில் தங்கம் வென்றது இலங்கை




சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் உடல் வலிமையைப் பரிசோதிக்கின்றது. ஆனால் பராலிம்பிக் போட்டிகள் உடல் வலிமைக்கு அப்பால் உள வலிமையினையும் பரிசீலிக்கின் றது. ஆம்! உடல் பாதிப்புக்களுடன் கூடிய மாற்றுத்திறன் வீர, வீராங்கனைகளே இப்போட்டியில் பங்குபற்றுகின்றனர். 2021 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற பராலிம்பிக் போட்டிகளில் இரு இலங்கை வீரர்கள் பதக்கம் பெற்றிருந்தனர். இதனூடாக இலங்கை ஒரு தங்கம், ஒரு வெண்கலப் பதக்கத்தினை வென்றது.

இதில் தங்கத்தை வென்ற தினேஷ் பிரியந்த உலகச் சாதனை ஒன்றினை யும் பதிவு செய்தார். இந்த ஒலிம்பிக் போட்டியில் ஈட்டியெறிதல் போட்டியில் பங்கு பற்றிய தினேஷ் 67.79 மீற்றர் தூரத்திற்கு எறிந்து இவ்வெற்றிச் சாதனையைப் பதிவு செய்து தங்கம் வென்றார். இவர் 2016 பராலிம்பிக்கில் வெண்கலப் பதக்கத்தினையும், உலக பரா சம்பியன்ஷிப் போட்டியில் இருவெள்ளிப் பதக்கங்களினையும் ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகளில் ஒரு தங்கம் எனப் பல பதக்கங்களினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தசரசம்

தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்

| | |
|---|---|
| 01. இலக்கியச் சுவை | 06. மாணாக்கருக்கு ஒரு கட்டுரை |
| 02. பாலருக்கு ஒரு கதை | 07. வெளிநாட்டுப் பயணம் |
| 03. இலகு வழி English | 08. உலகப் புகழ் பெற்ற மனிதர்கள் |
| 04. நலம் தரும் மருத்துவம் | 09. அதிசயிக்க வைக்கும் உண்மைகள் |
| 05. பலன் சொல்லும் ஜோதிடம் | 10. விலங்கொன்றின் வாழ்க்கை |

## 01. இலக்கியச் சுவை

**இராமர் கதை** (கடந்த இதழ் 30இன் தொடர்ச்சி...)

### மாயமான் வருகையும் சீதையைக் கவர்கையும்

இராவணன் தன் ஏவலரைப் பார்த்து, தெய்வத் தச்சனை அழைத்து வந்து ஒரு சந்திரகாந்தக் கல்லாலான ஒரு மணிமண்டபம் அமைக்கச் சொல்லுகிறான். அப்படியே மண்டபமும் தயாராகிறது. இராவணன் வந்து அந்த மண்டபத்தைப் பார்வையிடு கிறான். தான் மனதால் நினைத்த காரியத்தை நிறைவேற்ற ஆலோசனை வழங்கக் கூடிய அமைச்சர்களை உடனே வரும்படி ஆணையிட்டான். அதன்படி அமைச்சர்கள் வந்து கூடினார்கள். அப்படிக் கூடி ஆலோசித்தபின், தான் நினைத்த காரியத்தை முடித் துக் கொடுக்கும் ஆற்றல் படைத்த, தவநெறியில் விளங்கும் மாரீசன் இருக்கு மிடத்துக்குத் தன் புஸ்பக விமானத்தில் ஏறிச் செல்கிறான். யார் இந்த மாரீசன்?

சுகேது என்ற யக்சனின் பெண் தாடகை. தாடகைக்கும் சுந்தன் எனும் யக்சர் தலைவனுக்கும் பிறந்தவன் இந்த மாரீசன். இவனது தம்பி சுபாகு. அகத்திய முனிவர் இட்ட சாபத்தால் தாடகையும் அவள் மக்களும் அரக்கர்களாகி, இராவணனின் தாய்வழிப் பாட்டனார் சுமாலியிடம் தஞ்சம் புகுந்தனர். இவர்களை சுமாலி தன் மக்களாகவே பாவித்தான். இந்த உறவு முறையால் இந்த மாரீசன் இராவணனுக்கு மாமன் முறையாகிறான். தாடகை முன்பு விஸ்வாமித்திரரின் யாகத்தைக் கெடுக்க வந்தபோது இராமன் விட்ட கணையால் சுபாகு உயிர் துறந்தான், மாரீசன் கடலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்து தப்பிப் பிழைத்தான். இராவணன் தன்னை நாடித் தன் வீட்டிற்கு வந்ததைக் கண்டு மாரீசனுக்கு அச்சம் ஏற்பட்டது. எனினும், அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அவனை மிக மரியாதையோடு வரவேற்று உபசரித்தான். "மூவுலகங்களையும் ஒரு குடைக்கீழ் ஆட்சி செய்துவரும் இராவணேஸ்வரனாகிய தாங்கள், என் இல்லம் நாடி வந்ததின் நோக்கம் என்னவோ?" என்று வினவினான்.




வீர வேலைக் கையில் ஏந்திய மாரீசா! மனிதர்கள் வலிமையுடையவர்கள் ஆகிவிட்டார்கள். தண்டகாருண்யத்தில் மானுடர் இருவர் உன் மருமகள் சூர்ப்பனகையின் மூக்கை வாளால் அரிந்து விட்டார்கள். இதைவிட நம் குலத்துக்கு வேறு ஓர் இழிவு நேர முடியுமோ?. என் தம்பியர்களான கரன், தூசணன் இருவரையும் ஒரு மானுடன் தன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளால் கொன்றுவிட்டான். இது நம் வீரத்துக்கும் புகழுக்கும் ஏற்பட்டுவிட்ட மிகப் பெரிய இழுக்கு அல்லவா? கரனும், தூசணனும் வில்லினால் அடிபட்டு உயிர் துறந்து கிடக்க, நீயோ இரு கரங்களையும் தலைமேல் குவித்துத் தவம் செய்துகொண்டிருக்கிறாயே!'. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளால், நான் மனம் குமைந்து போய்க்கிடக்கிறேன். அந்த மானுடர்கள் என் வீரத்துக்கு இணையானவர்கள் இல்லை என்பதால், அவர்களோடு நான் போர் புரியச் செல்லவில்லை. ஆனால் அவர்களோடு வந்திருக்கிற ஒரு பெண்ணைக் கவர்ந்து வர விரும்புகிறேன். அதற்கு உன் உதவி தேவை. அதை நாடியே நான் இங்கு வந்தேன்" என்றான் இராவணன்.

இராவணனது சொற்கள் இரும்பைக் காய்ச்சி காதில் ஊற்றியதுபோல இருந்தது மாரீசனுக்கு. சீச்சீ! என்ன செயல் இது! என்று வெறுப்புற்றான். செவிகளைத் தன் கைகளால் பொத்திக் கொண்டான். பயத்தை நீக்கிச் சற்றுத் தெளிவடைந்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசலானான். "மன்னா! இப்படிப்பட்ட செயலைச் செய்வாயானால் உன் வாழ்நாள் முடிந்து போகும். உனக்குப் புத்தி இல்லாமல் போய்விட்டதோ? இது நீயாகச் செய்யும் காரியமாகத் தெரியவில்லை. அறம் தவறுவாயானால் அனைத்தையும் நீ இழந்து நிற்பாய்! பிறருடைய நாட்டுக்கு உரிமையான நீரைத் தன் வலிமையால் எவனொருவன் அபகரித்துக் கொண்டு தர மறுக்கிறானோ, எவனொருவன் பிறருக்கு உரிமையான நாட்டை அதர்ம வழியில் கைப்பற்றி வைத்துக் கொள்கிறானோ, எவனொருவன் தர்மத்துக்குப் புறம்பான வழியில் குடிமக்களிடம் அநியாய வரிகளை வசூலிக்கிறானோ, எவனொருவன் மாற்றான் இல்லத்தில் வாழும் அடுத்தவன் மனைவிமீது ஆசை கொண்டு அவளை அபகரிக்கிறானோ அவர்களைத் தர்ம தேவதை தண்டித்து அழித்து விடுவது உறுதி'. தேவலோகத்துக்கு அதிபதி இந்திரன். அவன் அகலிகைமீது ஆசை கொண்டதால் சாபக்கேட்டை அடைந்தான். அவனைப் போலவே அழிந்து போனவர் எண்ணிக்கை ஏராளம் ஏராளம். உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உரிமையுள்ள அழகியர் அனேகர் இருக்க, செய்யக்கூடாதவற்றை நீ என்னிடம் செய்யச் சொல்லுகிறாய்'. நீ நினைத்ததை முடித்தாலும்கூட நீ அடையப் போவது தீவினையும் பழியுமே. அதுமட்டுமல்ல, சீதையை நீ அபகரித்தால் இராமன் உன்னையும் உன் சந்ததியினரையும் பூண்டோடு அழிப்பது உறுதி. உன் படைத் தலைவன் கரனையும் அவன் படைகளையும் ஒரு கணையால் இராமன் கொன்று போட்டதை நீ ஏன் அறியவில்லை. அதுமட்டுமா? உன் குலத்தையே பூண்டோடு ஒழித்துவிட அவன் உறுதி கொண்டிருப்பது உனக்குத் தெரியவில்லையா? அதைப் பற்றி நீ சிந்திக்காதது ஏன்? விராடன் வீரத்தைப் பற்றி அறியாதார் யார்? அந்த விராடன் இராமனால் கொல்லப்பட்ட செய்தியை நீ அறியவில்லையா? மாண்டு போனவர்கள் போனவர்களே! இனி நீயாவது வாழ முயற்சி செய். என் தாய் தாடகைக்கும் தம்பி சுபாகுக்கும் இந்த இராமன் எமனாக வந்ததும், நான் அடிபட்டுத் தப்பிப் பிழைத்ததும் இப்போது நினைத்தாலும் அச்சம் உண்டாகிறது. அப்பேறப்பட்ட இராமன் உனக்கு எதிரியாக வந்து வாய்த்து விட்டானே என்று மனம் வருந்துகிறேன். நான் சொல்லும் அறிவுரைகளைக் கேள்!" என்றான் மாரீசன்.

மாரீசனின் அறிவுரை வார்த்தைகளைக் கேட்ட இராவணன் மிகுந்த கோபமுற்றவனாய் தகாத சொற்களால் வசைமாரி பொழிகிறான். "உன் அறிவுரைகள் எனக்குத் தேவை இல்லை. நான் இட்ட கட்டளைகளை மட்டும் செய்து முடி" என உத்தரவிடுகிறான். "மறுத்தால் உன்னைக் கொன்று விடுவேன்" என்றும் எச்சரிக்கிறான். "சரி! சரி! சொல். நான் என்ன செய்ய வேண்டும்" என்றான் மாரீசன். உடனே கோபம் தணிந்து இராவணன் மாரீசனைத் தழுவிக்கொண்டு "சீதையை எப்படியாவது என்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிடு" என்றான். இராவணன் கையால் சாவதைக்காட்டிலும் இராமனின் அம்புக்கு இரையாவதே நலம் எனக் கருதி மாரீசன் ஒப்புக் கொண்டான். "அதற்கு நான் செய்ய வேண்டியது என்ன?" என்று கேட்டான். "மாரீசா! உன் தாயைக் கொன்ற இராமனைக் கொல்வதாக நான் சங்கல்பம் செய்திருக்கிறேன். என்னிடம் வந்து என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறாயே. ஏதாவது மாயம் செய்து சீதையை என்னிடம் கொண்டுவந்து சேர்த்து விடு!". "நான் என்ன மாயம் செய்ய வேண்டும், சொல்" அதற்கு இராவணன் "மாரீசா! நீ ஒரு பொன்மான் வடிவம் எடுத்துக் கொண்டு, அந்த சீதையின் முன்பாகப் போ. அவளுக்குப் பொன்மான்மீது ஆசை ஏற்படுமாறு செய்" என்றான். மாரீசனுக்கு உடல் நடுங்கியது. உயிருக்கு இறுதி வந்து விட்டது என்பதை உணர்ந்து கொண்டான். இராவணன் கேட்டுக் கொண்டபடி மாரீசன் சீதாபிராட்டி விரும்பும்படியான பொன்மான் வடிவம் எடுத்துக் கொண்டான். அங்கிருந்து இராமபிரான் இருந்த தண்டகாரண்யம் சென்றடைந்தான்.

நிலையா மனம் கொண்ட பெண்களிடம் காமுகர்கள் மயங்கிப் பின் செல்வதுபோல காட்டு மான்கள் எல்லாம் இந்த மாயமானின் பின்னால் ஓடின. அப்போது மலர் கொய்யும் நிமித்தமாய் சீதை, வனத்தில் அந்தப் பகுதிக்கு வந்து சேர்ந்தாள். அவளுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் இந்த மாயமான் பட்டுவிட்டது. அதன் பேரழகு அவள் மனதைச் சுண்டி இழுத்தது. அந்த மாயமானும் அவள் முன்னே வந்து நின்று பார்த்தது. இந்த அற்புத மானைப் பிடித்துத் தருமாறு இராமனிடம் கேட்பதற்காகச் சீதை இராமனிடம் விரைந்து போனாள். இராமனைக் கைகூப்பி வணங்கியபின் சொல்லுகிறாள் "பொன்னால் செய்தது போன்ற ஒரு மான், உடல் ஒளி பிரகாசிக்க அதன் கால்களும் செவிகளும் மாணிக்கம் பதித்ததுபோல மின்ன இங்கே வந்திருக்கிறது" என்றாள். "சீதா! நீ சொல்லுவது போன்ற ஒரு மான் இந்த பூமியிலேயே கிடையாதே" என்று கூறிய இராமன், எனினும் இதை உணர்ந்தும் அவள் ஆசையைப் பூர்த்தி செய்ய எண்ணி அந்த மானைப் பிடிக்கக் கிளம்பினான். அப்போது இலக்குவன் அண்ணனின் செயலைக் கண்டு "அண்ணா! வேண்டும் என்று ஆசைப்படக்கூடிய பொருள் இது அல்ல. வேண்டாம் இது. உடல் பொன் நிறமாக இருக்கிறது. காலும் செவியும் மாணிக்கம் போல் இருக்கிறது. இவை மானின் தன்மைக்கு ஏற்றதாக இல்லையே. ஆதலால் இதில் ஏதோவொரு மாயம் இருக்கிறது. இது நிஜமான மான் அல்ல" என்றான். "லக்சுமணா! நீ சிறுவன். உனக்குத் தெரியாது. நாம் கண்டும் கேட்டுமிராத எத்தனையோ வகைகள் இருக்கின்றன" என்றான் இராமன். இவர்கள் இருவரும் இப்படி விவாதம் செய்து கொண்டிருந்தால் அந்த மான், ஓடிப் போய்விடும் என்று அஞ்சினாள் சீதை. உடனே இராமன் சீதையுடன் சென்று, 'அந்த மானை எனக்குக் காட்டு' என்றான். தன் கூரிய அறிவினால் ஆராய்ந்து பார்க்காத இராமனும் "இது அழகாகத்தான் இருக்கிறது" என்று தம்பியை அழைத்து "லக்சுமணா! பார் இந்த மானுடைய அழகை" என்றான். இலக்குவன் இராமனைத் தடுக்க முயன்றான். "இது அரக்கர்கள் செய்யும் மாயம் அண்ணா! இதன் பின்னால் நீங்கள் போக வேண்டாம்" என்று தடுத்தான். "இந்த மானை நம் முன்பாக அனுப்பிவிட்டு இதற்குப் பின்னால் பலர் இருக்கிறார்கள்" என்றான். "அப்படியானால் அவர்களைத் துரத்திச் சென்று என் அம்புக்கு இரையாக்கிவிட்டு வருவேன்" என்றான் இராமன். இந்த நேரத்தில் சீதை இராமனிடம் "இந்த மானைப் பிடித்துத் தர மனம் இல்லையோ" என்கிறாள். "லக்சுமணா! நான் இந்த மானின் பின்னால் விரட்டிச் சென்று பிடித்து வருவேன். விரைவில் வந்து விடுகிறேன். அதுவரை நீ சீதைக்குக் காவலாக இங்கேயே இரு" என்று கூறிவிட்டு இராமன் விரைந்து சென்றான். உடனே இலக்குவன் இராமனை நோக்கி "அண்ணா முன்பே தாடகையைக் கொன்றபோது வந்த மூன்று அரக்கர்களில் ஒருவன் தப்பி உயிர் பிழைத்து ஓடிவிட்டான். அந்த மாரீசன்தான் இப்போது மான் உருவில் வந்திருக்கிறான் என்று நினைக்கிறேன். நீங்களும் இதனை உணர்ந்து கொள்வீர்கள்" என்று சொல்லிவிட்டு சீதைக்குக் காவலாக நின்றான். இராமன் தன்னைத் துரத்தி வருவது கண்டு அந்த மாயமான் முதலில் மெல்ல நகர்ந்தது; பின்னர் வெறித்துப் பார்த்தது; அச்சம் கொண்டது போல மேலே துள்ளிக் குதித்தது; காதுகளை விரைத்துத் தூக்கிக் கொண்டு தாவிக் குதித்து ஓடியது. மான் ஓடவும், இராமனும் தொடர்ந்து ஓடினான். மிக தொலைதூரத்துக்கு ஓடினான். ஒரு சமயம் அந்த மான் இராமனை நெருங்கி வரும். பின்னர் அவனை விட்டுத் தொலைதூரம் ஓடிவிடும். மான் உருவில் வந்த மாரீசன், இராமன் தன்னைப் பிடிக்கமாட்டான், அம்பைச் செலுத்திக் கொல்லவே முயல்வான் என்று எண்ணி, தாவிக் குதித்து மேலெழுந்து பாய்ந்து செல்லலானான். அதேநேரம் இராமனும் ஒரு கொடிய அம்பை எடுத்து வில்லில் பூட்டி "இவன் சென்ற இடம் தொடர்ந்து சென்று அவன் உயிரை அழித்து விடு" என்று சொல்லி செலுத்தினான். இராமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்திய பாணம் மான் உருக் கொண்ட அரக்கனின் நெஞ்சில் பாயவும், அவன் எட்டுத் திசையும் கிடுகிடுக்கும்படியாக "சீதா! லக்சுமணா!" என்று இராமனுடைய குரலில் கூவி அழைத்து, மான் உருவம் மறைந்து அரக்கன் உருவில் ஒரு குன்றுபோல கீழே விழுந்தான். மான் உருவம் மாறி, அரக்கனின் நிஜ உருவத்தோடு மாரீசன் விழவும் 'அடடா! தம்பி லக்சுமணன் இது வஞ்சக பொய்மான் என்று சொன்னது எவ்வளவு சரியானது. நான் தவறிழைத்ததேனே' என்று நடந்தவற்றுக்காக வருந்தினான். பின்னர் சொந்த உருவத்தில் வீழ்ந்து கிடந்த அவனது உடலை அருகில் சென்று பார்த்து, இவன் கௌசிக முனிவனின் வேள்வியில் உயிர் தப்பி ஓடிய மாரீசனே என்று புரிந்து கொண்டான். 'இந்த அரக்கன் என் குரலில் உரக்கக் கத்தினானே, அதைக் கேட்டுச் சீதையும் இலக்குவனும் கவலை அடைவார்களே' என்று நினைத்தான். ஆனால், இலக்குவன் புத்திசாலி. இந்தக் குரலுக்குடையவன் அந்த அரக்கனே என்பதைப் புரிந்து கொள்வான்; சீதையையும் தேற்றுவாள்' என்று ஆறுதல் அடைந்தான். என்றாலும் இதனால் ஏதேனும் தீங்கு விளைவதற்கு முன்பாகத் தான் போய்விடுவது நல்லது என்று இராமனும் உடனே திரும்பிச் சென்றான்.

"சீதா, லக்சுமணா!" என்று மாய அரக்கன் எழுப்பிய மரண ஓலத்தைக் கேட்ட சீதை துயரமடைந்தாள். தன் கைகளால் வயிற்றில் அடித்துக் கொண்டு தரையில் விழுந்தாள். "மானைப் பிடித்துத் தரச்சொல்லி, இப்போது என் வாழ்வுக்கு ஆதாரமான கணவனையே இழந்து நிற்கிறேன்" என்று புலம்பி அழுதாள். "அரக்கன் புரிந்த வஞ்சத்தால் அண்ணன் உயிரற்று வீழ்ந்த பின்னும் உதவிக்கு ஓடாமல் இன்னமும் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாயே" என்று இலக்குவனை நோக்கிக் கடிந்து பேசி னாள். இந்த இடத்தில் சீதை இலக்குவனைப் பார்த்து, மிகக் கடுமையான வார்த் தைகளைப் பேசினாள் என்று வான்மீகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், கம்பர் பெரு மான் இந்த ஒரே வரியில் நிறுத்திக் கொண்டார். இவ்வளவு காலம் பார்த்துப் பழகிய இலக்குவனை அந்த அளவுக்குச் சந்தேகித்துப் பேசியிருக்க மாட்டாள் என்பது கம்பரின் நம்பிக்கை. "அன்னையே, அந்தக் குரல் அண்ணனுடையது அல்ல. அந்த மாய அரக் கன் செய்த சூழ்ச்சி. இந்த உலகில் அண்ணனையும் மிஞ்சிய வீரன் ஒருவன் இருக்கி றானா? நீங்கள் உண்மை உணராமல் வருந்துகிறீர்கள்" என்றான் இலக்குவன். "இல்லை எம்பெருமானுக்கு நேர்ந்த கதியை அறிந்த பிறகும் நீ கவலையின்றி இப்படிப் பேசுவது நெறியல்ல" என்று கடிந்து பேசினாள். "இராமபிரானிடத்து ஒரே ஒரு நாள் பழகியவர்கள்கூட இராமனுக்காகத் தன் உயிரையும் கொடுத்து உதவி புரிவர். ஆனால், லக்சுமணா! இராமனின் அவலக் குரலைக் காதால் கேட்டும் வருந்தாமல் என் எதிரில் நின்று கொண்டிருக்கிறாய். இனி எனக்கு வேறு வழி ஏது. இப்போதே தீ மூட்டி அதில் விழுந்து இறந்து போகிறேன்" என்றாள். இலக்குவன் மனக் கலக்கம் அடைந்தான். சீதையைத் தீயில் விழாமல் தடுத்தான். "தாங்கள் கூறிய சொற்களுக்கு அஞ்சுகிறேன். தாங்கள் ஏன் இறக்க வேண்டும். உங்கள் கட்டளையைச் சிரமேல் கொள்வேன். தாங்கள் மனவருத்தம் நீங்கி இங்கே இருப்பீர்களாக! விதி நம்மை மிகவும் கோபத்தோடு சோதிக்கிறது. விதியை நம்மால் வெல்ல முடியுமா? அடியேன் இப்போதே போகின்றேன். பெரிய கேடு ஒன்று நம்மைத் தேடி வருகிறது. என் அண்ணன் என்னை "இங்கே இரு" என்று சொன்ன கட்டளையை மீறி போகச் சொல்கிறீர்கள். தாங்கள் துணையின்றி தனித்து இருக்கின்றீர்கள். என் மனம் துயரத்தால் வெந்து போகிறது. அன்னையே விடைபெறுகிறேன்". இங்கே இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை தீயில் விழுந்து விடுவாள், இராமனைத் தேடி நான் போவேனேயானால், இங்கு ஏதோ தீங்கு வந்து சேரும். நான் என்ன செய்வேன்?" என்று இலக்குவன் வருந்தினான். பிறகு ஜடாயு இந்தக் காட்டில் நம்மை கவனித்துக் கொண்டுதான் இருக்கிறான், "அப்படி ஏதேனும் தீங்கு வருமானால் அவன் பார்த்துக் கொள்வான்" என்று தேறி இலக்குவன் இராமனைத் தேடிச் சென்றான்.

இலக்குவன் அவ்விடத்தை விட்டு நீங்கியதும், அங்கு மறைந்திருந்த இராவணன், ஒரு தவசி உருவம் தாங்கி சீதை இருக்குமிடம் வந்து சேர்ந்தான். அவன் தவசி வேடத் தோடு, கையில் ஒரு திரிதண்டகம் எனும் கோல் ஏந்தி வந்தான். பசியில் வாடுபவன் போலவும் தோற்றத்தில் உடல் நடுக்கம் கொண்ட ஒரு முதியவனைப் போலவும் இருந்தான். கையில் வீணையின் நாதத்தோடு வேதத்தைப் பாடிக்கொண்டு அங்கே வருகிறான். அவன் பர்ணசாலையின் வாயிலை வந்தடைந்து "யாரம்மா குடிசைக் குள்?" என்று அவன் கூவிய சொல் கேட்ட சீதை 'யாரோ பாவம்! இந்த வனத்திடை வாழும் ஒரு பரதேசி இவன்' என்று எண்ணிக்கொண்டு "வாருங்கள், இங்கு எழுந்தருள்க!" என்று கனிவோடு வரவேற்றாள். அப்போதுதான் தேவியை முதன்முதலாக இராவணன் பார்த்தான். அவனுக்கு உடல் வியர்த்தது. உள்ளத்தில் ஆசை வெள்ளம் கரை புரள, அழகுக்கெல்லாம் அழகு செய்யும் அழகை, புகழின் இருப் பிடத்தை, கற்பினுக்கு அரசியைத் தன் கண்ணால் நோக்கினான். தேவியின் திருவுருவைக் கண்டு அவன் தோள்கள் பூரித்தன. அவளை எப்படி அடைவது என்ற கவலையில் உடனே அவை மெலிந்தன. "இங்கே அமர்ந்து கொள்ளுங்கள்" என்று பிரம்பினால் செய்த ஆசனத்தைப் போலி சந்நியாசிக்கு இட்டாள் சீதை. தன் திரிதண்டத்தை ஓர் ஓரமாகச் சாத்திவிட்டு அமர்ந்தான் இராவணன். இந்தக் காட்சியைக் கண்டு காட்டில் மலைகளும், மரங்களும்கூட மருண்டன. பறவைகள் ஒலி எழுப்ப மறந்து மரங்களில் ஒளிந்து கொண்டன. விலங்குகள் இரை தேடாமல் அஞ்சி ஓடின, பாம்புகளும் படத்தைச் சுருக்கிக் கொண்டு புற்றில் ஒளிந்தன. அத்தகையதொரு பொழுதில் பாதகத் தொழில் புரியும் விலங்குகளும் விச ஜந்துக்களும்கூட அஞ்சும்படியான மாபாதகச் செயலைச் செய்ய இராவணன் துணிந்தான். அவன் சீதையை நோக்கி "இந்த இடம் யாருடையது? இங்கு வசிக்கும் தவசி யார்? நீங்கள் யார்?" என்றான். அதற்கு அவள்! "பழமையான இரகு வம்சத்தில் வந்த தசரத சக்கரவர்த்தியின் குமாரர், தன் தம்பியோடு, தன் தாயின் கட்டளைப்படி, அவர் உத்தரவைச் சிரமேல் தாங்கி வனம் புகுந்து இவ்விடம் வந்து வசிக்கிறார். அவர் பெயர்கூட தங்களுக்கும் தெரிந்திருக்குமே!" என்கிறாள் சீதை. "ஆம்! நீங்கள் சொன்ன செய்திகளைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆயினும் நேரில் கண்டதில்லை" என்றான். சீதை, சந்நியாசியை நோக்கி "இந்தக் கொடிய காட்டு வழியில் வந்து வருந்துகிறீர்களே, நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றாள். அதற்கு அந்தப் போலிச் சந்நியாசி வேடத்திலிருந்த இராவணன் இலங்கையிலிருந்து வந்திருக்கின்றேன்" "முற்றும் துறந்த தாங்கள், உடல்கூட பாரம் என்று எண்ணுகின்ற சந்நியாசி, வேதங்களைக் கற்ற அந்தணர்களை அணுகாமல், மனித உயிர்களைத் தின்னும் அரக்கர்களிடையே சென்று வாழக் காரணம் என்ன? தவசியர்களோடு தங்காமல், நீர்வளம் மிக்க நாடுகளில் தங்காமல், நல்ல குடும்பங்கள் வாழும் புகழ்மிக்க நாட்டில் தங்காமல், தர்ம வாழ்வை நினையாத அரக்கர்களிடையே தங்கி வாழ்கிறேன் என்று சொல்லு கிறீர்களே, என்ன தகாத காரியம் செய்தீர்!" என்றாள் சீதை. "பெண்ணே! அரக்கர்கள் தேவர்களைப்போல் கொடியவர்கள் அல்லர். எம்போன்ற தவசியர்க்கு இந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்களே நல்லவர்கள்' என்றான் அந்த போலிச் சந்நியாசி. இவன் உண்மையான தவசியல்ல என்பதையோ, அரக்கர்கள் இப்படி உருவத்தை மாற்றிக் கொண்டு வரக்கூடியவர்கள் என்பதையோ அறியாத அன்னை, இவன் மேல் சந்தேகப்படாமல் மேலும் பேசுகிறாள். "என்னதான் இருந்தாலும் கெட்ட குணமுடையவர்களோடு பழகுபவர்கள், நல்லவர்களாக எப்படி இருக்க முடியும்?" என்றாள் சீதை. சீதையின் ஐயத்தைப் போக்குபவன்போல இராவண சந்நியாசி தந்திரமாகப் பேசலானான். இருவரிடையேயும் வாக்குவாதம் தொடர்ந்தது. சீதை சொன்னாள். "பெரியவரே! சிங்கம் போன்ற இராமன் கையால் அரக்கர் குலமே அழியப் போகிறது. தர்மத்தைப் பாவம் எங்காவது வெல்ல முடியுமா? இதைத் தாங்கள் அறிவீரோ? நீங்களும்தான் அரக்கர்கள் அழியப் போவதைப் பார்க்கப் போகிறீர்கள்" என்றாள் சீதை. இதைக் கேட்டதும் இராவணனுக்குக் கோபம் எழுந்தது. சீற்றம் கொண்டதால் அவனது போலி சந்நியாசி வேடம் கலைய உண்மையான இராவண உருவம் வெளிப்பட்டது. என்னதான் நல்லவன்போல வேடம் போட்டு நடித்தாலும், கோபம் தலைக்கேறும் போது, ஒருவனது உண்மையான குணம் வெளிப்பட்டு அவனை அடையாளம் காட்டிவிடும் என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டு இது. இராவணன் துறவி வேடம் கலைந்து, பத்துத் தலைகளோடும் இருபது கரங்களோடும் தீ உமிழ்கின்ற கண்களோடும் நின்ற தோற்றத்தைக் கண்ட சீதையின் உயிர் கூற்றுவனைக் கண்டதைப்போல அஞ்சி நடுங்கியது. என் வீரத்தை எண்ணிப் பார்க்காமல், அற்ப புழுக்களைப் போன்ற மானுடர்களை நீ வலிமை மிகுந்தவர் என்று என் முன்னே புகழ்கிறாயே! நீ ஒரு பெண் என்பதால் பிழைத்திருக்கிறாய். இல்லையேல் உன்னைப் பிசைந்து தின்றிருப்பேன். அப்படிச் செய்த பிறகு உன்மீது ஆசை வைத்திருந்து, உன்னை அடையமுடியாமல் சாப்பிட்டு விட்டதற்காக என் உயிரையும் விட்டு இருப்பேன்".

"பெண்ணே! நடுங்காதே! இதுவரை என் தலைகள் எவரையும் வணங்கியது இல்லை. என் பத்துத் தலைகள்மீதும் வீற்றிருக்கும் கிரீடங்களைப் போல நான் உன்னை என் தலைமீது வைத்துப் போற்றுவேன். தேவலோகப் பெண்டிரெல்லாம் உனக்கு ஏவல் செய்ய, நீ ஏழு உலகங்களையும் ஆளும் செல்வச் செழிப்பில் வாழும்படி பார்த்துக் கொள்வேன்" என்றான். இதைக் கேட்ட பிராட்டி, தன் செவிகளைக் கரங்களால் பொத்திக் கொண்டாள். பின்னர் சொல்லுகிறாள் "அரக்கனே! பூமியிலுள்ள நல்லொ ழுக்கம் எதுவுமே இல்லாத கடையனே! கவிகளாலும் கற்பனை செய்ய முடியாத வெற் றிப் பெருமிதமுடைய இராமபிரானின் மனைவியாகிய என்னை, முனிவர்கள் அக்னியில் இடுகின்ற புனிதமான ஆகுதியை, கேவலம் ஒரு நாய் விரும்புவதைப் போல பேசுகிறாய். என்ன வார்த்தை சொன்னாய்?" என்று சொல்லி மேலும் பேசுகிறாள். "உன் கருத்துக்கு நான் இணங்காவிடில் நீ எனைக் கொன்று விடுவாய் என அஞ்சி என் குலப் பெருமையை இழக்க மாட்டேன். இராமனது பாணங்கள் உன்னைக் கொன்று அழித்து விடும். அதற்கு முன் எங்கேனும் ஓடி ஒளிந்து உன் உயிரைக் காத்துக் கொள்" என்றாள்.

என்ன செய்வதென அறியாத சீதை "இறைவா! என் தலைவா! பெருமானே! இளையோய்!" என்று வாய்விட்டுக் கூவிக் கதறினாள். இவ்வேளை இராவணன் சீதை இருந்த இடத்தில் பூமியைக் கீழாகவும் பக்கவாட்டிலும் ஒரு யோசனை அளவு பெயர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தான். அப்படிப் பெயர்த்தெடுத்த நிலத்தோடு கூடிய சீதையைத் தன் தேரில் வைத்தான். சீதை மூர்ச்சையாகி வீழ்ந்து விட்டாள். அப்போது இராவணன் வான மார்க்கமாகச் செல்ல தன் தேரோடு மேலே எழும்பினான். மூர்ச்சை தெளிந்து எழுந்த சீதாபிராட்டி தன் நிலை அறிந்து அரற்றினாள்; புரண்டாள் அழுதாள். "ஏ! தர்மமே! இது என்ன சோதனை. இத்துயரிலிருந்து காப்பாற்று!" என்று அலறினாள். "யார் என் நிலையை அந்த இராமனிடம் சென்று சொல்லுவீர்கள்?" என்று கதறினாள். பிராட்டியின் புலம்பலைக் கேட்ட இராவணன் கோபமடைந்தான். "அந்த இராமன் என்னோடு போரிட முடிந்தால் என்னைக் கொன்றுவிட்டு உன்னை மீட்டுச் செல்லட்டும்" என்று சொல்லிச் சிரித்தான். "அவர் இல்லாதபோது என்னைக் கவர்ந்து செல்கிறாய். அப்படி அவரோடு போரிட்டு வெல்லும் திறமை உனக்கு இருந்தால் இங்கேயே நில். ஓரடிகூட நகராதே!" என்று சொன்னாள் அன்னை. இப்படி பிராட்டி கூறிய கணத்தில் இடி இடிப்பது போன்ற குரல் ஒன்று "அடா! எங்கே போகிறாய் நீ! இங்கேயே நில்!" என்று ஒலித்தது. அப்போது எதிரில் கழுகரசன் ஜடாயு தன் பெரிய சிறகுகளை விரித்து எதிர்க்க வந்தான்.

(தொடரும்....)

## 02. பாலருக்கு ஒரு கதை

# சிங்கத்தை வென்ற ஆடு



ஒருநாள் இடிமின்னலுடன் கடும் மழை பொழிந்தது. காட்டில் மேய்ந்து கொண்டிருந்த விலங்குகள் அங்குமிங்கு மாய் ஓடிச் சென்று மழைக்கு ஒதுங்கிக் கொண்டன.

ஆடு ஒன்று குகையொன்றுக்குள் சென்று ஒதுங்கிக் கொண்டது. பின்புதான் அதற்குத் தெரியும் அது சிங்கத்தின் குகையென்று.

கடும்மழை பொழிந்து கொண்டிருந்தமையினால் வெளியே செல்ல முடியவில்லை. அது சிங்கம் வந்தால் "என்னைப் பிடித்து உண்டு விடுமே" என்று பயந்தது. என்ன செய்வது எனத் தெரியாமல் நடுங்கியது. திடீரென அந்த ஆட்டிக்கு விசித்திரமான எண்ணம் தோன்றியது.

அப்பொழுது மழைக்கு ஒதுங்குவதற்காக காட்டிலிருந்த சிங்கம் குகைக்கு ஓடி வந்தது. சிங்கம் வருவதை உணர்ந்த ஆடு தன் விசித்திர எண்ணப்படி தைரியத்தை தன்னுள் வரவழைத்துக் கொண்டு கம்பீரமான குரலில் குகைச் சுவர்களில் துள்ளிக் குதித்தபடியே "யார் வருவது சிங்கமா? நான் தொண்ணிற்றொன்பது புலிகளையும் ஒரு சிங்கத்தையும் உண்பதாய் விரதம்; இதில் தொண்ணிற்றொன்பது புலிகளை உண்டாகி விட்டது. மீதியாக உள்ள சிங்கத்தை உண்டால் விரதம் முடிவடைந்து விடும். நீர் என்னைத் தேடி வந்திருக்கிறீரா? வாரும்" என்றது.

மழைச் சத்தத்தினாலும், குளிர் நடுக்கத்தினாலும் சிங்கத்தினால் அது ஆடு என்பதை உணர முடியவில்லை. தனது குகைக்குள் ஏதோ வித்தியாசமான விலங்கு இருப்பதாய் உணர்ந்தது. அதன் கம்பீரமான வார்த்தைக்குப் பயந்து ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம் ஓடி வருவதை வழியில் கண்ட நரி "சிங்க ராஜாவே ஏன் இப்படி வியர்க்க, விறுவிறுக்க ஓடி வருகிறீர்" எனக் கேட்டது. அதற்கு சிங்கம் நடந்தவற்றைக் கூறியது.
சிங்கத்தின் கதையைக் கேட்ட நரி சிரித்தபடியே "சிங்க ராஜாவே இந்தக் காட்டில் உம்மை விட "பெரிய விலங்கென்று எதுவுமில்லை. ஏதோ ஒரு சிறிய விலங்கு உம்மை ஏமாற்றியுள்ளது. வாரும் போய் பார்ப்போம்." எனக் கூறியபடி சிங்கத்தை அழைத்துக் கொண்டு குகையை நோக்கிச் சென்றது நரி.

இதனைக் கண்ட ஆட்டுக்கு மேலும் பயம் அதிகரித்தது. எனினும் அது தனக்குள் தைரியத்தை ஏற்படுத்திக் கொண்டு 'ஏய் நரியாரே எனது விரத நிறைவுக்குச் சிங்கத்தை அழைத்து வந்தமைக்கு நன்றி உடனே உள்ளே அழைத்து வாரும்' எனக் கூறியபடி குகைச் சுவரில் இரண்டு, மூன்று தடவைகள் துள்ளிக் குதித்தது.
'அந்த விலங்கு தன்னைப் பிடிக்க வருகின்றது' என்று எண்ணிய சிங்கம் நரியையும் தள்ளி வீழ்த்தி விட்டுக் காட்டுக்குள் ஓரே ஓட்டமாய் ஓடி விட்டது.
மழையும் சற்று குறைந்தது ஆடு தப்பினேன்; பிழைத்தேன் என்று குகையை விட்டு ஓடிச் சென்றது.

**எமக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தபோதும் தைரியத்துடன் புத்திசாலித்தனமாக நடந்தால் அந்த ஆபத்திலிருந்து தப்பிக் கொள்ளலாம்.**

## 03. Let's Learn English (இலகுவழி ஆங்கிலம்)

1. Our country is Sri Lanka.
   எமது நாடு இலங்கை ஆகும்.
2. The capital of Sri Lanka is Sri Jeyawardenapura fort.
   இலங்கையின் தலைநகரம் ஜெயவர்த்தனபுர கோட்டை ஆகும்.
3. The total area of our country is 65610 square km$^2$.
   எமது நாட்டின் மொத்தப் பரப்பளவு 65610 சதுர km$^2$ ஆகும்.
4. The total population of our country is 20 million
   எமது நாட்டின் மொத்தச் சனத்தொகை 20 மில்லியன் ஆகும்.
5. The national animal of our country is grizzled giant squirrel.
   எமது நாட்டின் தேசிய விலங்கு மரஅணில் ஆகும்.
6. The national bird of Sri Lanka is jungle fowl.
   இலங்கையின் தேசியப் பறவை காட்டுக்கோழி ஆகும்.
7. Our country got its independent day on 04 , February, 1948.
   எமது நாடு 1948 பெப்ரவரி 04 இல் சுதந்திரம் பெற்றது.
8. The independent day of our country is February 04.
   எமது நாட்டின் சுதந்திரதினம் பெப்ரவரி 04 ஆகும்.
9. There are 9 provinces in Sri Lanka.
   இலங்கையில் 09 மாகாணங்கள் உள்ளன.
10. There are 22 electoral districts and 25 administrative districts in our island.
    எங்களுடைய தீவில் 22 தேர்தல் மாவட்டங்களும் 25 நிர்வாக மாவட்டங்களும் உள்ளன.

**V.Sasikumar,**
**Kopay Teachers' College.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. திருக்குறள் மகிமை




உலகப் பொதுமறை எனப்போற்றப்படும் திருக்குறள் இற்றைக்கு ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவரினால் எழுதப்பட்டது. இது தமிழ் இலக்கியத்தில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இத்திருக்குறள் பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, முப்பால், தெய்வ நூல், உத்தர வேதம், பொது மறை, தமிழ் மறை, வான்மறை எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. திருவள்ளுவர் மனித வாழ்வியலை அறம், பொருள், இன்பம் எனும் முப்பால்களில் 133 அதிகாரங்களில் 1330 குறள்களாகச் சுவைபட நூலாக்கியுள்ளார். இது மாந்தர்கள் பயன் பெறத்தக்கவகையில் திருக்குறள் எனும் நூலாய் இவ்வையத்திற்கு படைத்தளிக்கப்பட்டுள்ளது. திருக்குறளானது மனிதனால் மனிதனுக்குச் சொல்லப்பட்ட ஓர் உயரிய நூலாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டியாகத் திகழும் இந்நூல், தமிழின் பெருமையினை உலகுக்கு உணர்த்தியது. திருக்குறளின் மகிமை அறிந்த உலகத்தோர் தத்தம் மொழிகளில் இதனை மொழிபெயர்த்து திருக்குறளின் வழி தம் வாழ்வினை அமைத்து, இன்புற்று வாழ விரும்பினர். இதனால் இத்திருக்குறளானது, இன்று இந்திய மொழிகள் பல தாண்டி ஆசிய, ஐரோப்பிய மொழிகள் என நூற்றுக்கு மேற்பட்ட மொழி களில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. இதில் உலகில் அதிகளவில் பேசப்படும் சீன மொழி, பொதுவான ஆங்கில மொழி மட்டுமன்றி, நரிக்குறவர் பேசும் வக்போலி மொழி என பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டமை சிறப்புடையதாகும். உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட நூல்களின் பட்டியலில் திருக்குறள் மூன்றாம் இடத்தில் உள்ளது. இதனூடாக திருக்குறளின் மகிமையினை யாவரும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

திருக்குறள் இன, மத, மொழி, நாடு என எதையுமே சாராது, பிறந்த தமிழ் மற்றும் பிற மொழிகளைச் சாராது சமயம்சார் கடவுள்களின் பெயர்களைக் கொண்டிராது, எல்லா மதக் கருத்துக்களையும் கொண்ட ஒரு பொது நூலாக இருப்பது திருக்குறளின் மகிமைக்கு ஒரு காரணம் எனலாம். மனித வாழ்வின் மேம்பாட்டிற்கான கல்வி, ஒழுக்கம், வாய்மை, அன்பு, நட்பு, பண்பு, அறிவு என பல விடயங்களைத் திருக்குறள் கொண்டிருப்பது இந்நூலின் மகிமைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகும். திருக்குறள் ஒரு கடல்; முத்து மூழ்கி எடுக்கலாம்! திருக்குறள் ஒரு சுரங்கம்; தங்கம் தோண்டி எடுக்கலாம். திருக்குறள் ஒரு புதையல்; வைரம் வெட்டி எடுக்கலாம். திருக்குறள் அள்ள அள்ள குறையாத அமுத சுரபி; அமுதம் பருகலாம்' எனப் பெரியோர்கள் திருக்குறளின் மகிமையினை விளக்குகின்றனர்.

இரண்டே வரிகளில் ஆழ்ந்த கருத்தினைக் கொண்டு விளங்கும் திருக்குறளின் மகிமையை இடைக்காடர் எனும் புலவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்" எனக் கூறியபோது இதில் திருப்தி அடையாத ஔவையார்,

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி குறுகத் தறித்த குறள் எனக் கூறி திருக்குறளின் பொருள் ஆழத்தை வெளிப்படுத்தினார். மேலும் நல்வழி எனும் நூலில் "தேவர் குறளும் திரு நான் மறை முடிவும்

மூவர் தமிழும் முனி மொழியும் கோவை திருவாசகமும் திருமூலர் சொல்லும் ஒருவாசகம் என்று உணர்"

திருக்குறளின் மகிமையின் ஓர் வெளிப்பாடுதான் இன்று கன்னியா குமரியில் காட்சி அளிக்கும் 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை. திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்டதனால் இச்சிலையினை 133 அடிகளில் அமைத்துப் பெருமைப்படுத்தியுள்ளனர். இது தவிர இந்தியா மட்டுமன்றி, உலகின் பல நாடுகளிலும் திருவள்ளுவரின் சிலைகள் சிறிய அளவுகளில் நிறுவப்பட்டுள்ளன. மேலும் திருவள்ளுவர் நினைவகங்கள், திருவள்ளுவர் கோட்டம், திருவள்ளுவர் விருது, குறள் பீடம் விருது, திருவள்ளுவர் இதழ், திருக்குறள் நெறிப்பரப்பு நிறுவனம் எனத் திருவள்ளுவரினதும் திருக்குறளினதும் பெயர்கள் பெருமையுடன் உலகெங்கும் ஒலிக்கின்றன.

திருக்குறளுக்கு முதன் முதல் மணக்குடவர்தான் உரை எழுதினார். மேலும் பலர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர். எனினும் பரிமேலழகரது உரை சிறப்புடையது. இன்று பலர் திருக்குறளுக்கு உரை எழுதி அதன் கருத்தினை எளிமையாக்கி அனைவரும் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் செய்துள்ளனர். திருக்குறள் 1812 இல்தான் முதலில் அச்சிடப்பட்டது. அதுவரை ஓலைச் சுவடிகளில்தான் வாழ்ந்து வந்தது. இன்று புத்தகங்கள், இறுவட்டுகள், இணையம் எனப் பல சாதனங்களின் ஊடாகத் திருக்குறள் எம்மை வந்து சேருகின்றது. காலத்தால் அழியாத நூலாக திருக்குறள் தன்னை நிலைநிறுத்தியுள்ளமை திருக்குறளின் மகிமையின் மற்றுமோர் அடையாளம் எனலாம். இவ்வாறாக திருக்குறள் இன்று மகிமைமிக்க நூலாக உலகில் மிளிர்கின்றது. வள்ளுவர் நெறியில் வையகம் வாழ்க.

## 05. அதிசயிக்க வைக்கும் உண்மைகள்

மூளையில் பொருத்திய சிப் மூலம் வீடியோ கேம் விளையாடும் குரங்கு. எப்படி சாத்தியம்?




நியூராலிங்க் என்னும் தங்களது தொழில்நுட்ப திட்டத்தின் ஒரு பகுதியாக, தலையோட்டில் (Skull) பொருத்தப்பட்ட சிப் மூலம் குரங்கொன்று வீடியோ கேம் விளையாடுவதை சாத்தியப்படுத்தியுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த தொழில்நுட்பத் தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முனைவோரான 'ஈலோன் மஸ்க்' தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரை தலைமையிடமாக கொண்டு செயற்படும் நியூராலிங்க் என்னும் இவரது புதிய ஸ்டார்ட் அப் நிறுவனம், மனித மற்றும் விலங்குகளின் மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் தொழில்நுட்பத்தை உருவாக்கி வருகிறது. அதன் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில், குரங்கு ஒன்றின் தலையோட்டில் சிறு வயர்களை கொண்ட சிப் போன்ற வயர்லெஸ் (கம்பியில்லாமல் தகவலை கடத்தும்) கருவியைப் பொருத்தியுள்ளதாக' ஈலோன் மஸ்க் அறிவித்துள்ளார். "நியூராலிங்க் நிறுவனத்திடம், தலையோட்டில் (Skull) சிறு வயர்களுடன் கூடிய கம்பியில்லாக் கருவி பொருத்தப்பட்ட குரங்கொன்று உள்ளது" என்று கூறியுள்ளார். அதாவது, மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் நியூராலிங்க் நிறுவனத்தின் தொழில்நுட்பத்தை இக்குரங்கின் வாயிலாகப் பரிசோதித்து வருகின்றனர். "உங்களால் அந்த சிப் எங்கு பதியப்பட்டுள்ளது என்பதை காண முடியாது. அது மிகவும் மகிழ்ச்சியான குரங்கு" என்று கூறிய மஸ்க், இத் திட்டம் குறித்த மேலதிக அறிவிப்புகள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்று கூறியுள்ளார். "இந்த சிப் பொருத்தப்படுவதன்மூலம், குரங்குகள் ஒன்றுக்கொன்று மன விளையாட்டு விளையாடுவது சாத்தியமா? என்பது உள்ளிட்ட விடயங்களை நாங்கள் அறிய விரும்புகிறோம். அது மிகவும் அருமையாக இருக்கும் அல்லவா?" என்று அவர் மேலும் கூறினார்.

இத் திட்டத்தின் நோக்கம் என்ன?

இதுபோன்ற விநோதமான திட்டத்தை 'ஈலோன் மஸ்க்' மேற்கொள்வது இது முதல் முறையல்ல. முன்னதாக, கடந்த ஆண்டு நடந்த நிகழ்ச்சி ஒன்றில், மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் தனது தொழில்நுட்பத் திட்டத்தை நிரூபிக்கும் வகையில், மூளையில் ஒரு நாணய அளவில் கம்ப்யூட்டர் சிப் பொருத்தப்பட்ட பன்றியை ஈலோன் மஸ்க் அறிமுகப்படுத்தி இருந்தார்.

அந்தப் பன்றியின் பெயர் "கெர்ட்ரூட்".

"இது கைகளில் அணியும் ஃபிட்பிட், மூளைக்குள் சிறு வயர்களுடன் இருப்பதைப் போன்றது" என்று இணையம் வழியே நடந்த அந்த அறிமுக நிகழ்ச்சியில் ஈலோன் மஸ்க் கூறி இருந்தார்.

மனித மூளையையும் இயந்திரங்களையும் இணைக்கும் இதுபோன்ற இடைமுகம், நரம்பியல் குறைபாடு உள்ளவர்கள் தங்களது மூளைமூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்பேசிகள் அல்லது கணினிகளைக் கட்டுப்படுத்த வழிவகை செய்யும் என்று மஸ்க் கூறுகிறார்.

அதுமட்டுமின்றி, பிற்காலத்தில் மறதி நோய், பார்கின்சன் நோய் மற்றும் முதுகெலும்பு காயங்கள் போன்ற நிலைமைகளைக் குணப்படுத்த இத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

ஆனால் இத் திட்டத்தின் நீண்ட கால நோக்கமே, "மனிதர்களுக்கு மேற்பட்ட அறிவாற்றல் யுகம்" என்று கூறும் எலான் மஸ்க், அத்தகைய ஒரு யுகத்தில் செயற்கை நுண்ணறிவு மனித குலத்தை அழிக்கும் அளவுக்கு பலம் பெற்றுவிடும் என்றும் அப்போது அதை எதிர்த்துப் போராடுவதற்குத் தயாராக வேண்டும்" என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

இந்த நீண்ட காலத் திட்டத்தின், முதல் பகுதியாக கடந்த ஆண்டு, இத் தொழில் நுட்பத்தைப் பன்றிகளிடத்தில் பரிசோதிப்பது குறித்த அறிமுகக் கூட்டத்தை இணையம் வழியே நடத்தியிருந்தார் மஸ்க்.

அதில், மூளையில் "கம்ப்யூட்டர் சிப்" பொருத்தப்பட்ட பன்றியான கெர்ட்ரூட்டின் நரம்பியல் செயல்பாடுகள் கணினி வாயிலாக கண்காணிக்கப்பட்டன.

அப் பன்றி தனக்கு முன்பாக இருக்கும் உணவைப் பார்க்கும்போது அதன் உடலில் ஏற்படும் நரம்பியல் செயல்பாடுகள் குறித்த தகவல்கள் அதன் மூளையில் பொருத்தப்பட்டுள்ள சிப் அனுப்பும் வயர்லஸ் சிக்னல்கள் வாயிலாகப் பெறப்பட்டன.

சுமார் ஓராண்டுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட நியூராலிங்க் கருவியின் முதல் பதிப்பு தற்போது எளிமையாக்கப்பட்டு, சிறியதாக மாற்றப்பட்டுள்ளதாக மஸ்க் அந்த நிகழ்வின்போது தெரிவித்திருந்தார். 2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், உருவாக்கும் சாதனம் ஒரு மனித தலைமுடியை விட மெல்லிய நெகிழ்வான நூல்களுடன் இணைக்கப்பட்ட 3,000க்கும் மேற்பட்ட மின்முனைகளைக் (Electrodes) கொண்டுள்ளது. இதனால் 1,000 மூளை நரம்பணுக்களின் (Neurons) செயல்பாட்டைக் கண்காணிக்க முடியும்.

நன்றி - ஆதாரம்: Kalmunainet.com

## 06. விலங்கொன்றின் வாழ்க்கை

**கழுகு**

**உயிரியல் வகைப்பாடு**

திணை : விலங்கு

தொகுதி : முதுகுநாணி

வகுப்பு : பறவை

வரிசை : கழுகு - பருந்தினம்

குடும்பம் : கழுகு இனம்



பறவை இனத்திலே அதிகூடிய காலம் வாழக் கூடியது கழுகு. இதன் ஆயுட்காலம் 37 ஆண்டுகள். பறவை இனங்களிலே கழுகு அதிக உயரத்தில் பறக்கும் திறனைக் கொண்டுள்ளது. கழுகுகள் அதிக உயரத்தில் பறந்தாலும் நிலத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரனங்களைத் தெளிவாகப் பார்க்கும் கூர்மையான கண் பார்வையைக் கொண்டவை. இவற்றின் பார்வை மனிதனின் பார்வையை விட நான்கு மடங்கு அதிகமானது. இதனால், ஆயிரம் அடி உயரத்தில் பறந்தாலும் தரையில் ஓடும் ஒரு முயலையும் கண்டு பிடித்து வேட்டையாட முடியும்.

பெண் கழுகு தனக்கான துணையைத் தெரிவு செய்வதற்காக ஆண் கழுகிற்கு ஒரு பலப்பரீட்சையினையே நடாத்தி விடுகின்றது. அது என்னவென்றால், பெண் கழுகு ஓர் ஆண் கழுகுடன் நிலத்திற்குச் சென்று சிறு தடி போன்ற குச்சியை எடுக்கும். பின்பு மேலே ஆணுடன் உயரத்திற்குப் பறந்து சென்று அந்தக் குச்சியினைக் கீழே போட்டுவிடும். நிலத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருக்கும் குச்சியை ஆண் கழுகு விரட்டிச் சென்று, அது நிலத்தில் விழ முன் பிடித்து, அதை உயரப் பறக்கும் பெண் கழுகிடம் சேர்க்கும். பெண் கழுகு மீண்டும் குச்சியைக் கீழே போட்டு விடும். ஆண் கழுகு பிடிப்பதற்காகக் கீழே செல்லும். இவ்வாறு குச்சியை வீழ்த்துவதும், எடுத்து வருவதுமாகப் பல மணி நேரப் பரீட்சை நடைபெறும். பெண் கழுகு ஆண் கழுகிடமுள்ள பொறுப்புணர்வை நிச்சயப்படுத்திக் கொண்டதும் அது உறவு கொள்ள இடமளிக்கும். அதன் பின் ஆண் கழுகு தன்னுடைய இறுதிக் காலம் வரை அதனோடு மட்டுமே இணை சேரும்.

கழுகு மிக உயரமான இடங்களில் கூர்மையான முட்களையுடைய மரக்கிளைகளில் அல்லது பாறைப் பிளவுகளில், மற்ற உயிரினங்களால் எளிதில் நெருங்க முடியாத இடங்களில் கூடு கட்டும். இடம் தேர்வானதும் ஆண் கழுகு முள், குச்சி, புல், வேர்கள் மற்றும் வைக்கோல் வைத்து லாவகமாக கூட்டினை அமைக்கும். பின் அக்கூட்டில் பெண் கழுகு முட்டையிட்டு அடைகாத்து குஞ்சு பொரிக்கும். கழுகுகள் 4 முதல் 5 ஆண்டுகளில் பருவ வயதை அடைகின்றன. பெண் கழுகு வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே முட்டையிடும். 1 தொடக்கம் 3 முட்டைகள் இடும். கழுகுகளின் வகைகளுக்கேற்ப அவற்றின் அடை காக்கும் காலங்கள் மாறுபடுகின்றன. 1 தொடக்கம் 2 மாதங்கள் வரை முட்டைகளை அடைகாக்கின்றன.

கழுகு தன் குஞ்சுகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கூட்டில் வைத்து உணவு ஊட்டும். பிறகு தாய்க் கழுகு மென்மையான கூட்டினை நீக்கி விட்டு முட்கள் குஞ்சுகளை குத்துவதுபோல வைக்கும் இதனால் கூட்டின் ஓரத்திற்கு வரும் குஞ்சுகளைக் கீழே தள்ளிவிடும். குஞ்சுகள் நிலைதடுமாறி விழப்போகும்போது இறக்கைகளை விரித்து பறக்க முயலும். ஆனால் பறக்க முடியாது. குஞ்சுகள் கீழே விழுந்து அடிபடாமல் ஆண் கழுகு பறந்து சென்று தன் முதுகில் தாங்கி மீண்டும் கூட்டிற்கு கொண்டு வந்து சேர்க்கும். இவ்வாறு தொடர்ந்து பயிற்சியளித்துக் குஞ்சுகளைப் பறக்க வைத்து இரை தேடப் பழக்கும்.

கழுகின் ஆயுட் காலம் 37 ஆண்டுகள் எனக் கூறப்படுகின்ற போதிலும் கழுகினைப் பற்றிய ஒரு செய்தி இணையங்களில் பரவலாகக் காணப்படுகின்றது. அதாவது கழுகு தன் 40வயதை அடையும்போது, அதன் அலகு இரையைப் பிடிப்பதற்கும் உண்பதற்கும் பயனற்றதாகிவிடும். அதன் இறக்கைகளும் தடித்து, பறப்பதற்குக் கனமாக மாறி விடும். இந்த நிலையில், ஒன்று இறப்பது அல்லது வலிமிக்க நிகழ்ச்சிக்குத் தன்னையே உட்படுத்துவது. இவைதான் கழுகுக்கு இருக்கும் இரண்டு வாய்ப்புகள். இந்தக் கால கட்டத்தில் கழுகு உயர்ந்த மலைக்குப் பறந்து சென்று அங்கிருக்கும் பாறையில் தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகை வேகமாக மோதி அலகை உடைக்கும். புதிய அலகு வளரும்வரை கூட்டிலேயே தனித்திருக்கும். புதிய அலகு வளர்ந்த பின் இறகுகளைத் தானே பிய்த்தெடுக்கும். ஐந்து மாதங்களுக்குப் பின் புதிய இறகுகள் முளைக்க ஆரம்பிக்கும். இந்த மாற்றத்துக்குச் சுமார் 150 நாட்கள் ஆகும். அத்தனை நாட்கள் காத்திருந்து, வலியை அனுபவித்து, மறுபிறவி அடைந்த கழுகு இன்னும் 30 ஆண்டுகள் வாழத் தகுதியுள்ளதாக மாறும். இச்செய்தியின் உண்மைத் தன்மை பற்றிய ஆய்வுகள் தொடர்கின்றன.

கழுகுகளிற்கு அழகிய அலகு, கண்கள், கூர்மையான நகங்கள் கொண்ட கால்கள் மற்றும் இலகுவான இறக்கைகள் உண்டு. வயது வந்த கழுகின் நிறை 3 முதல் 5 கிலோகிராம் வரை இருக்கும். கழுகுகளிலுள்ள இறக்கையின் நீளம் இரண்டு மீட்டர்வரை இருக்கும். பெண் கழுகுகள் ஆண்களைவிடவும் பெரிதாக உள்ளன.

பொதுவாக, மனிதன் உண்கிற உணவுகளைச் செரிமானம் செய்வதற்கு ஹைட்ரோகுளோரிக் அமிலம் பயன்படுகிறது. அதைப்போல கழுகுகளுக்குச் செரிமானம் ஆவதற்குக் கந்தக அமிலம் பயன்படுகிறது. இறந்து பல நாள்களாகி அழுகிய நிலையில் இருக்கின்ற விலங்குகளின் உடல் பாகங்களிலுள்ள பாக்டீரியா மற்றும் வைரஸ்களால் நோய்த் தொற்று ஏற்படாமல் இருப்பதற்குக் கந்தக அமிலம் பாதுகாப்பளிக்கின்றது. எதிரிகளைத் தாக்கவும் தன்னுடைய முட்டைகளைப் பாதுகாக்கவும் ஆபத்து நேரங்களில் உடலிலிருக்கிற கந்தக அமிலத்தைக் கழுகுகள் உமிழ்கின்றன. கந்தக அமிலம் எந்த ஓர் உயிரினத்தின்மீது பட்டாலும் கருகி விடும்.

கழுகுகள் ஓரிடத்தில் தொடர்ந்து வட்டமடித்தால் ஒன்று அங்கு விலங்கின் இறந்த உடல் இருக்கும், அல்லது புலி இருக்கும். கழுகுகள் காடுகளுக்குள் புலிகளைப் பின் தொடர்ந்து செல்லும் பழக்கமுடையவை. ஏனெனில், புலிகள் வேட்டையாடிய இரையை இரண்டு நாட்களுக்குப் பாதுகாத்து உண்ணும். அப்படி வேட்டையாடப்பட்ட விலங்கு களின் உடலைக் கழுகுகள் உண்ணும். கழுகுகளுக்கு உடலில் வியர்வைச் சுரப்பிகள் இருப்பதில்லை. அதனால் உடலிலுள்ள அழுக்குகளைத் தன்னுடைய கழிவின் மூலமாக வெளியேற்றுகின்றன. ஒவ்வொரு முறையும் இறந்த உடலை உணவாக எடுத்துக் கொண்ட பின்பு குளித்த பிறகே மீண்டும் கழுகுகள் தன்னுடைய கூட்டுக்குத் திரும்பும்.

கழுகுகள் உலகில் பல பகுதிகளிலும் பரவலாக வாழ்கின்றன. வட அமெரிக்கா மற்றும் ஆபிரிக்காவில் பல்வேறு வகையான கழுகுகள் காணப்படுகிறன. உலகில் 23 வகையான கழுகுகளில் 14 வகையான கழுகுகள் அழிந்து வரும் பட்டியலில் உள்ளன. இந்தியாவில் 7 வகை கழுகுகள் மட்டுமே காணப்படுகின்றன. வெண்முதுகு கழுகு, கருங்கழுத்து கழுகு, மஞ்சள்முகக் கழுகு, செந்தலைக் கழுகு ஆகிய நாலு வகைக் கழுகுகள் தமிழகத்தில் காணப்படுகின்றன.

கழுகுகள் பல வகை. ஹாக் ஈகிள்ஸ் (அக்விலா ஃபாஸியாட்டா), குள்ள கழுகுகள் (அக்விலா ரெனாட்டா), இந்திய பருந்து கழுகுகள் (அக்விலா கினேரி), கோல்டன் ஈகிள்ஸ் (அக்விலா கிறைசெட்டோஸ்), ஸ்டோன் ஈகிள்ஸ் (அக்விலா ராபாக்ஸ்), ஸ்டெப்பி ஈகிள்ஸ் (அக்விலா நிபாலென்சிஸ்), ஆப்பு வால் கழுகுகள் (அக்விலா ஆடாக்ஸ்), கல்லறைக் கழுகு, தங்கக் கழுகு, வெள்ளை வால் கழுகு என்பன இவற்றுள் சிலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுகுகள் பெரும்பாலும் வேட்டையாடுபவர்களாலும் சாதாரண ஓநாயுடனான போர்களினாலும் இறக்கின்றன. ஆனால் இது ஒரு பெரிய பிரச்சினை அல்ல, பட்டினிச் சாவுக்கு இவை இலக்காகின்றன. உணவு வழங்கல் பற்றாக்குறையாக இருக்கும் போது வலிமையான குஞ்சு மட்டுமே தப்பிக் கொள்கின்றது. கழுகுகள் மின்கம்பங் களில் தங்கள் கூடுகளை உருவாக்க முயற்சிக்கும்போது மின்சார அதிர்ச்சியால் இறக்கின்றன. கழுகுகளின் எண்ணிக்கைக் குறைவுக்கு மிக முக்கிய காரணியாக இருப்பது டைகுளோஃபினாக் என்கிற வலிநிவாரணி மருந்து. வீட்டில் வளர்க்கிற கால்நடைகளான ஆடு மற்றும் மாடு போன்ற விலங்குகளுக்கு வலி நிவாரணியாக டைகுளோஃபினாக் மருத்துவரால் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற மருந்துகள் மாட்டின் உடலில் எச்சமாகத் தேங்கி விடுகின்றன. சிகிச்சை பலனளிக்கா மல் இறந்து போகிற மாடுகளின் உடல்களை கழுகுகள் உட்கொள்வதனால் கழுகுகளின் சிறுநீரகங்கள் செயலிழந்து இறந்து விடுகின்றன.

அழிந்து வரும் பறவைகள் பட்டியலில் கழுகுகள் உள்ளன. உலகளவில் கழுகு களின் எண்ணிக்கை குறைந்து வருவதால், அவற்றைப் பாதுகாக்கும் வகையில் செப்டம்பர் முதலாவது சனிக்கிழமை, கழுகுகள் தினமாக உலக நாடுகளால் கடைப் பிடிக்கப்படுகின்றது.

## 07. உலகப் புகழ் பெற்ற மனிதர்கள்

### சுந்தர் பிச்சை




"யார் என்ன பாதையை வேண்டும் என்றாலும் தேர்வு செய்யலாம். ஆனால் நமது கனவு மற்றும் மனது என்ன சொல்கிறது என்பதைப் பின்பற்ற வேண்டும். அதுதான் முக்கியம். நீங்கள் துணிந்து செயற்படுவது உங்களுக்கு உடனடியாகப் பலனளிக்காமல் இருக்கலாம் ஆனால் காலம் செல்லச் செல்ல உங்களுக்கு நிச்சயம் பலன் கிடைக்கும்," என்று தெரிவித்தவர் சுந்தர்பிச்சை. இவர் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர். 12 வயது வரை இவர் வீட்டில் யாருமே தொலைபேசி வைத்திருக்கவில்லை. ஆனால் இன்று உலகிலுள்ள அனைவராலும் அறியப்படும் Google இன் தலைமை அதிகாரியாக இருக்கின்றார். இவ்வுயரிய பதவியில் ஒரு தமிழர் இருப்பது தமிழினத்துக்கே பெருமை சேர்க்கின்றது.

சுந்தர்பிச்சை யூலை 12, 1972இல் இந்தியாவின், தமிழ்நாட்டில் உள்ள மதுரையில் பிறந்தார். இவரது தந்தை ரகுநாதபிச்சை பிரிட்டிஷ் கூட்டு நிறுவனமான ஜி.இ.சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்பொறியியலாளராகப் பணியாற்றினார். இவர் தன் பிள்ளைகளின் கல்வியில் கூடுதல் கவனத்தைச் செலுத்தி வந்தார். இவர் வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பிறகு, அன்று தன் வேலையில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து பிள்ளைகளிடம் பேசு வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவரது தாயார் இலட்சுமி. சுருக்கெழுத்தாளராக பணியாற்றியவர். "நான் தமிழ்நாட்டில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவன். நான் வளர வளர தொழில்நுட்பம்தான் எனக்கு உலகத்தை அறிமுகப்படுத்தியது. சிறுவயதில் வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்தது, சாரே ஜகான் சே அச்சா என்று பொதிகையில் வரும் இசையை கேட்டது, பழைய மாடல் நம்பர் சுற்றக் கூடியத் தொலைபேசி பயன்படுத்தியது எனச் சிறு வயதில் பல தொழில்நுட்பங்களை, பார்த்து வியந்து இருக்கிறேன். தொலைக்காட்சி தொடங்கி போன் வரை எனக்கு எல்லாம் பல வாய்ப்புகளைக் கொடுத்து இருக்கிறது. சிறு சிறு தொழில்நுட்பங்கள்மூலம் நிறையக் கற்றுக் கொண்டேன்." என பி.பி.சி நேர்காணலில் தெரிவித்திருந்தார் சுந்தர் பிச்சை.

பொறியியலாளரான சுந்தர்பிச்சை சில நிறுவனங்களில் பணியாற்றினார். எனினும் நீண்ட காலம் இந்நிறுவனங்களில் பணியாற்றவில்லை. அவர் 2004 இல் கூகுள் நிறுவனத்தில் சேர்ந்தார். ஆரம்பத்தில் ஒரு சிறிய குழுவில் கூகுளின் தேடல் பகுதியில் வேலை பார்த்தார். பிறகு கூகுள் தனது சொந்த உலாவியை (Browser) உருவாக்கும் பொறுப்பைச் சுந்தருக்கு அளித்தது. அவர் இவ்விடயம் தொடர்பாக மூத்த ஊழியர்களுடன் தனது யோசனை குறித்து விவாதித்தார். அப்போதைய தலைமை நிர்வாகியாக இருந்த எரிக் ஷ்மிட்டன் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஓர் உலாவியை உருவாக்குவது மிகவும் விலையுயர்ந்த விவகாரம் என அவர் நினைத்தார். இருப்பினும் கூகுளின் உலாவியை உருவாக்குவதில் தீவிரமாக இருந்தார். இதற்காக அவர் கூகுள் ஊழியர்களைச் சமாதானப்படுத்தினார். இறுதியில் 2008 ஆம் ஆண்டு கூகுள் குரோம் என்ற இணைய உலாவி வெளியிடப்பட்டது.

கூகுள் க்ரோம் வெற்றியில் சுந்தர் பிச்சைக்கு முக்கிய பங்கு இருந்தது. பயனர்கள் நேரடியாக, கூகுளில் தேடுவதற்கு இந்த உலாவி உதவியது. இதனால் கூகுள் குரோம் நல்ல வெற்றியைக் கண்டது. போட்டி உலாவி நிறுவனங்களை மிஞ்சி குரோம் தனித் துவமான வெற்றியை பெற்றது. அதைத் தொடர்ந்து சுந்தர் சர்வதேச அளவில் அறியப்பட்டார். அதன் பிறகு குரோம் ஓ.எஸ், குரோம் புக்ஸ் மற்றும் குரோம் கேஸ்ட் போன்ற முக்கியமான தயாரிப்புகளுக்கு குரோம் வழிவகுத்தது. 2008 ஆம் ஆண்டு சுந்தர் தயாரிப்பு மேம்பாட்டுத் துணை தலைவராக பதவி உயர்வு பெற்றார். இதன் பிறகு கூகுள் குறித்த விளக்க காட்சிகளில் இவர் அடிக்கடி தோன்றத் தொடங்கினார். மேலும் கூகுளில் தொடர்ந்து அவர் பதவி உயர்வு பெற்று வந்தார். 2012 ஆம் ஆண்டுக்குள் அவர் குரோமின் மூத்த துணைத் தலைவரானார். அதன் பிறகு 10 ஆகஸ்ட் 2015 அன்று கூகுளின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக சுந்தர் பிச்சை தேர்வு செய்யப்பட்டார். சுந்தர் பிச்சை கூகுள் நிறுவனத்தின் தாய் நிறுவனமான ஆல்ஃபபெட்டின் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். கூகுள் நிறுவனத்தின் நிறுவுநர்களான லாரி பேஜ் மற்றும் செர்ஜி ப்ரின் கூட்டாக இந்த அறிவிப்பை வெளியிட்டனர். கூகுள் நிறு வனத்திற்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் கூகுள் தேடல், விளம்பரம், Google Map. மற்றும் You Type உள்ளிட்ட தயாரிப்புகளில் சுந்தர் பிச்சையின் பங்களிப்பும் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக 2015ஆம் ஆண்டு பொறுப்பேற்ற சுந்தர் பிச்சை தற்போது கூடுதலாக ஆல்ஃபபெட்டையும் கவனித்துக் கொள்கின்றார்.

சென்னையில் வசித்த சுந்தர்பிச்சை பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் காரக்பூரில் உள்ள ஐஐடியில் உலோகப் பொறியியல் படிப்பைப் பூர்த்தி செய்தார். பின்னர், உதவித் தொகையுடன் அமெரிக்க ஸ்டேன்போர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அக்காலப்பகுதியில் அமெரிக்கா செல்வதற்கான விமான டிக்கட்டின் கட்டணம் சுந்தர்பிச்சையின் தந்தையின் ஒரு வருட சம்பளத்திற்கும் அதிகமானதாக இருந்தது. அமெரிக்காவின் ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை முடித்து எம்.எஸ் பட்டத்தினைப் பெற்றார். அறிவியல் மற்றும் இயற்பியலில் பட்டம் பெற்ற இவர், உலகப் புகழ்பெற்ற வார்ட்டன் பல்கலைக்கழகத்தின் வர்த்தகப் பிரிவில் எம்.பி.ஏ பட்டத்தினையும் பெற்றார்.

சுந்தர் பிச்சையின் மனைவிதான் அஞ்சலி பிச்சை. அஞ்சலி இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர். கரக்பூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி)-யில் வேதியியல் பொறியியலில் பட்டம் பெற்றவர். இருவரும் ஐஐடியில் இளங்கலைப் பொறியியல் மாணவர்களாக இருந்தபோது காதலர்களாகினர். இக்காதல் திருமணத்தில் நிறைவுற்றது. இதன் பயனாக காவ்யா மற்றும் கிரண் என இரு பிள்ளைகள். தற்போது இவர்கள் அமெரிக்காவில் விசித்து வருகின்றனர்.

## 08. நலம் தரும் மருத்துவம்

### கொவிட்–19



கொரோனா வைரஸ்

கொரோனா வைரஸ் குடும்பத்தில் இதுவரை சார்ஸ் (SARS-COV), மெர்ஸ் (MERS-COV), 229E, NL63, OC43, HK01, NOVEL COV-19) எனப் பல வைரஸ்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வைரஸ்கள் விலங்குகள், பறவைகள் மற்றும் மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

❖ சார்ஸ் வைரஸ் (SARS-COV) 2002ஆம், ஆண்டு சீனாவின் குவாங்டன் மாகாணத்தில் கண்டறியப்பட்டது. இவ்வைரஸானது சுமார் 26 நாடுகள்வரை பரவி சுமார் 8,000 மனித உயிர்களைக் காவு கொண்டதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வைரஸ், ஆனாது புனுகு எனப்படும் ஒருவகை பூனையிலிருந்து பரவியதாகச் சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ மெர்ஸ் வைரஸ் (MERS-COV) மத்திய கிழக்காசிய நாடுகளில் காணப்பட்ட இவ்வைரஸ் ஒட்டகத்திலிருந்து தோற்றம் பெற்றுப் பரவியதாகச் சொல்லப்படுகின்றது. இவ்வைரஸ் உலகில் சுமார் 850 மனித உயிர்களைப் பலி எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

❖ NOVEL COV-19 இவ்வைரஸானது 2019, டிசம்பர் 31 சீனாவின் ஹீபெய் (வுஹான்) மாகாணத்தில் கண்டறியப்பட்டது. இது வௌவாலிலிருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

கொரோனா வைரசுகள் பலவாகினும் அவற்றுள் இம்மூன்று வைரசுகள் மனித இனத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியதோடு, மனித உயிர்களையும் பலியெடுத்துள்ளன. இவற்றுள் கோவிட்-19 மனித குலமே எதிர்பாராதவிதமாக உலகில் பாதிப்பை ஏற்படுத்தி பல இலட்சக்கணக்கான உயிர்களையும் பலியெடுத்து வருகின்றது. பலகோடி மக்கள் இவ்வைரஸ் தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

கொரோனா என்பது லத்தீன் மொழிச் சொல் இதற்கு "கிரீடம்" என்பது பொருள். கொரோனா வைரசினை வெறும் கண்களினால் காண முடியாது. நுண்ணோக்கி ஊடாகவே பார்க்க முடியும். இவ்வாறு பார்க்கும் பொழுது கூர்முனைகளைக் கொண்ட கிரீட வடிவில் காணப்படும். இதனால்தான் இதனை கொரோனா என அழைக்கின் றனர்.

**கொவிட்-19 திரிபுகள்:**

கொரோனா கொவிட் - 19 வைரஸ் தற்பொழுது பலவாறாகத் திரிபடைந்துள்ளது. இதனால் பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கையும் மரணமடைவோரின் எண்ணிக் கையும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதில் காமா கொரோனா வைரஸ் திரிபானது பிரேசிலிலும் பீட்டா மற்றும் ஒமிக்ரான் கொரோனா வைரஸ் திரிபுகளானது, தென்னாபிரிக் காவிலும் ஆல்பா கொரோனா வைரஸ் திரிபானது, இங்கிலாந்திலும் டெல்டா கொரோனா திரிபானது இந்தியாவிலும் கண்டறியப்பட்டுள்ளது. வைரசின் உயிரியல் பரவல் சக்தி RO மூலம் (R-naught) பார்க்கப்படுகின்றது. ஆரம்பத்தில் சீனாவில் வுஹான் நகரில் கொவிட் - 19 கண்டறியப்பட்டபோது அதன் RO 2.5 ஆக இருந்தது. எனினும் தற்போது திரிபடைந்த வைரஸ்சுகளில் இது 8.0 ஆக உயர்ந்துள்ளது. எனவே இப்பிரிவு கள் அதிக அளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியன.

**கொவிட் - 19 வைரஸ் எவ்வாறு பரவுகின்றது?**

இவ்வைரஸானது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எளிதாகத் தொற்றி விடுகின்றது.

❖ தும்மும் போதும், இருமும் போதும்: ஒருவர் தும்மும் போதோ அல்லது இருமும் போதோ வெளியேறும் துணிக்கைகள் இன்னொருவரின் சுவாசத்தினூடாக அவருக்குள் பரவுகின்றது. எனவே, ஒருவர் தும்மும்போதும் அல்லது இருமும் போதும் அத்துணிக்கைகள் வெளிவராதவாறு தனது கைகளைப் பயன்படுத்தி, தடுத்தல் அல்லது முகக்கவசம் அணிதல் அவசியம்.
தனிமனித இடைவெளி 1-2 மீற்றர் வரை இருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ இவ் வைரசானது உலோக கைபிடிகள், பாத்திரங்கள், பண நோட்டுக்கள் போன்றவற்றில் சில மணிநேரங்கள் உயிருடன் இருக்கக் கூடியவை. எனவே, வைரஸ் தொற்றுள்ள ஒருவரின் கைபட்ட இப்பொருட்களைப் இன்னொருவர் தொடும்போது அவருக்கு இத்தொற்று ஏற்படுகின்றது. தொற்றுள்ள கையினால் தன்னுடைய மூக்கினை அல்லது வாயினைத் தொடும்பொழுது இவ்வைரசானது உள்நுழையும். கைகளைச் சவர்க்காரமிட்டு அடிக்கடி கழுவுவதனூடாகவும் வெயில், சுடுநீர் போன்ற சூடான செயல்முறைகளூடாகவும் இவ்வைரசினை அழிக்கலாம்.

❖ திரிபடைந்த வைரசுக்கள் காற்றினூடாகவும் ஓரளவு பரவக் கூடியது. எனவே, நெரிசலான இடங்களுக்குச் செல்லுதல், முகக்கவசமின்றி இருத்தல், லிப்ரில் பயணம் செய்தல், ஏசி ரூம்களில் இருத்தல், நெரிசலான பயணங்கள், திருமண வைபவங்கள், விழாக்கள் என்பவற்றில் இத்தொற்றுப் பரவ அதிக வாய்ப்புகள் உள்ளன. ஒருவர் இவ்வைரஸ் பாதிப்புக்குள்ளாகி இருப்பின் அது ஏனையோருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இவ்வாறான சந்தர்ப்பங்களில் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும்.

## 09. வெளிநாட்டுப் பயணம்

### சவுதி அரேபியா





கொடி



சின்னம்

பரப்பு: 21,49,690 ச.கி.மீ$^2$. 8,29,996 சதுர மைல்
மக்கள் தொகை: 27 மில்லியன்
தலைநகரம்: ரியாத்
நாணயம்: சவுதி ரியால் (ரிச்சார்)
ஆட்சி மொழி: அரபு மொழி
மதம்: இஸ்லாம்
மாகாணங்கள்: அல்-பஹா, அல்-குதுத் அல்-ஷமாலியா, அல்-ஜவ்ஃப், அல் - மதீனா, அல்-காசிம், ரியாத், அல்-ஷர்கியா (அதாவது கிழக்கு மாகாணம்), ஆசிர், கைல், ஜிசான், மக்கா, நஜ்ரான், தபுக்.

சவுதி அரேபியா இராய்ச்சியம் ஒரு முடியாட்சி நாடாகும். இந்நாடு அல்-சவுத் குடும்பத்தினரால் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது. அல்-சவுத் மற்றும் அல் அஷ்-ஷேக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக அதிகாரத்தில் ஒருவரையொருவர் ஆதரித்துள்ளனர், மேலும் இரு குழுக்களிலுள்ள உறுப்பினர்களும் பெரும்பாலும் திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

சவுதி அரேபியா எந்த முறையான ஆவண ரீதியான அரசியலமைப்பையும் கொண்டிருக்கவில்லை, இங்கு அரசியல் கட்சிகள் கிடையாது. இங்குள்ள நீதிபதிகள் குர்ஆன் மற்றும் ஹதீஸ்கள், நபிகள் நாயகம் அவர்களின் சொற்பொழிவுகள் மற்றும் சொற்பொழிவுகளில் தங்கள் சொந்த விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நீதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். எண்ணெய் வளம் மிக்க இந்நாட்டின் பொருளாதாரம் மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. இந்நாட்டிற்கு வருடம் தோறும் மில்லியன் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அவர்கள் அனைவரும் நகரத்தின் செல்வம் மற்றும் ஆடம்பரங்களால் ஈர்க்கப்படுகிறார்கள்.

சவுதி அரேபியாவிலுள்ள மெக்காவில் இஸ்லாம் மதத்தின் இறைதூதர்களின் ஒருவரான முகமது நபிகள் நாயகம் 571ஆம் ஆண்டு பிறந்தார். இதனால் உலக வாழ் முஸ்லீம்களினால் போற்றுதற்குரியதோர் இடமாக விளங்குகின்றது.

சவுதி அரேபியா தென்மேற்கு ஆசியாவில் உள்ள அரேபிய தீபகற்பத்தில் அமைந் துள்ளது. இதன் எல்லைகளில் ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், கட்டார், ஏமன், ஜோர்டான், ஈராக் ஆகிய நாடுகள் அமைந்துள்ளன. இதன் எல்லைப் புறத்தில் பாரசீக வளைகுடா, செங்கடல் என்பனவும் உள்ளன. சவூதி அரேபியா, ஒரு பாலை வனப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நாடாகும். இங்கு கடுமையான வெப்பம் நிலவு கின்றது. அதிக பட்ச வெப்பநிலையாக $54\,^{\circ}C$ காணப்படுகின்றது, குறைந்த பட்ச வெப்ப நிலையாக - $11\,^{\circ}C$ காணப்படுகின்றது. இங்கு மழைப்பொழிவு மிக மிகக் குறைவு. இங் குள்ள மணற்காட்டுப் பிரதேசத்தில் ஒட்டக முள் மற்றும் சாக்சால் போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன. இங்கு ஒட்டகம், நரி, ஹைனா, குள்ளநரி, ஓநாய், ஹைராக்ஸ், மான் ஆகிய விலங்குகளைக் காணலாம். இங்கு விசப் பூச்சிகளும் காணப்படுகின்றன. பேரீச்சம் மரங்களும் அதன் பழங்களும் இங்கு அதிகம் காணப்படுகின்றன.

சவுதி அரேபிய மக்கள் நாட்டின் கால நிலைக்கேற்பவும் மதநம்பிக்கைகளுக்கேற்ப வும் தமது உணவுப் பழக்கத்தினைக் கைக்கொள்கின்றனர். ரொட்டி முக்கிய இடம் பெறுகின்றது.

இஸ்லாமிய நாடாகிய சவுதி அரேபியாவிலேயே மக்கா, மதீனா நகரங்கள் உள்ளன. இதில் மக்கா நகரிலேயே இஸ்லாமிய இறைதூதர்களில் ஒருவரான முகமது நபி அவர்கள் 571 களில் பிறந்தார். மக்கா நகர் நாட்டின் மேற்கேயுள்ள எல்-சரவத் மலையில் அமைந்துள்ளது. இவ்விடத்திற்கு யாத்திரை செல்வது முஸ்லிம்களின் கடமைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. மக்காவின் நடுவில் அல் மஸ்ஜித் அல் ஹராம் உள்ளது, இது 700,000 க்கும் அதிகமான மக்கள் வசிக்கும் ஒரு பெரிய மசூதி. மசூதிக்குள் ஒரு பெரிய காபா கோயில் உள்ளது. நகரின் மையத்தில் பிரதான சன்னதி உள்ளது - மஸ்ஜித் அன்-நபி மசூதி நபியின் புனித கல்லறை. முஸ்லிம்களின் முதல் மதக் கட்டடமும் உள்ளது - அல்-குபா மசூதி. இரண்டு புனித நகரங்களின் பிரதேசத் திலும் முஸ்லிம் யாத்ரிகர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பலன் சொல்லும் யோதிடம்

| நட்சத்திரங்கள் | அதிபதி | தேவதை | யோனி | பட்சி | கணம் | விருட்சம் |
|---|---|---|---|---|---|---|
| அஸ்வினி | கேது | சரஸ்வதி | ஆண் குதிரை | வல்லூறு | தேவர் | காஞ்சுரை |
| பரணி | சுக்கிரன் | துர்க்கை | ஆண் யானை | வல்லூறு | மனுசம் | நெல்லி |
| கார்த்திகை | சூரியன் | அக்னி | பெண் ஆடு | வல்லூறு | ராட்சசம் | அத்தி |
| ரோகிணி | சந்திரன் | பிரம்மா | ஆண் பாம்பு | வல்லூறு | மனுசம் | நாவல் |
| மிருகசீரிடம் | செவ்வாய் | சந்திரன் | பெண் பாம்பு | வல்லூறு | தேவம் | கருங்காலி |
| திருவாதிரை | ராகு | உருத்திரன் | பெண் நாய் | ஆந்தை | மனுசம் | செங்காலி |
| புனர்பூசம் | குரு (வியாழன்) | அதிதி | பெண் பூனை | ஆந்தை | தேவம் | மூங்கில் |
| பூசம் | சனி | வியாழன் | ஆண் ஆடு | ஆந்தை | தேவம் | அரசு |
| ஆயில்யம் | புதன் | ஆதிசேடன் | ஆண் பூனை | ஆந்தை | ராட்சசம் | புன்னை |
| மகம் | கேது | சுக்கிரன் | ஆண் எலி | ஆந்தை | ராட்சசம் | ஆல் |
| பூரம் | சுக்கிரன் | பார்வதி | பெண் எலி | ஆந்தை | மனுசம் | பலாசு |
| உத்தரம் | சூரியன் | சூரியன் | ஆண் எருது | காகம் | மனுசம் | அலரி |
| அஸ்தம் | சந்திரன் | ஐயப்பன் | பெண் எருமை | காகம் | தேவம் | ஆத்தி |
| சித்திரை | செவ்வாய் | துவஸ்டா | பெண் புலி | காகம் | ராட்சசம் | வில்வம் |
| சுவாதி | ராகு | வாயு | ஆண் எருமை | காகம் | தேவம் | மருது |
| விசாகம் | குரு (வியாழன்) | முருகன் | ஆண் புலி | காகம் | ராட்சசம் | விளா |
| அனுசம் | சனி | லட்சுமி | பெண் மான் | கோழி | தேவம் | மகிழ் |
| கேட்டை | புதன் | இந்திரன் | ஆண் மான் | கோழி | ராட்சசம் | பராய் |
| மூலம் | கேது | அசுரர் | ஆண் நாய் | கோழி | ராட்சசம் | மரா |
| பூராடம் | சுக்கிரன் | வருணன் | ஆண் குரங்கு | கோழி | மனுசம் | வஞ்சி |
| உத்தராடம் | சூரியன் | கணபதி | ஆண் கீரி | கோழி | மனுசம் | பலா |
| திருவோணம் | சந்திரன் | விஸ்ணு | பெண் குரங்கு | மயில் | தேவம் | எருக்கு |
| அவிட்டம் | செவ்வாய் | வசுக்கள் | பெண் சிங்கம் | மயில் | ராட்சசம் | வன்னி |
| சதயம் | ராகு | யமன் | பெண் குதிரை | மயில் | ராட்சசம் | கடம்பு |
| பூரட்டாதி | குரு (வியாழன்) | குபேரன் | ஆண் சிங்கம் | மயில் | மனுசம் | தேமா |
| உத்திரட்டாதி | சனி | காமதேனு | பெண் பசு | மயில் | மனுசம் | வேம்பு |
| ரேவதி | புதன் | சனி | பெண் யானை | மயில் | தேவம் | இரும்பை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுங்கள்/ வெல்லுங்கள்

## போட்டி இல. 31 வினாக்கள்

- **தமிழ்**

01. உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?
02. இராமாயணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
03. தசரதனின் மனைவிமார் யாவர்?

- **பொது அறிவு**

04. உலகிலேயே உயரமான விலங்கு எது?
05. உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?
06. அமெரிக்க ஜனாதிபதியின் பெயர் என்ன?

- **மாற்றுத்திறனாளிகள்**

07. சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
08. ஐக்கிய நாடுகள் சபையின் வலுவிழந்தோர் உரிமைப் பிரகடனம் எத்தனையாம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது?
09. லூடுவிக் வான் பேத் தேவன் செவிப்புலனை முற்றாக இழந்த நிலையில் வாசித்து வெளியிட்ட இசைத் தொகுப்பின் பெயர் என்ன?
10. இலங்கையில் செவிப்புலனற்றவர்களுக்கான முதலாவது பாடசாலை எப்போது? எங்கே ஆரம்பிக்கப்பட்டது?

## எழுதுங்கள்; வெல்லுங்கள்.

### போட்டி இல. 30 விடைகள்

01. ....................................................
02. ....................................................
03. ....................................................
04. ....................................................
05. ....................................................
06. ....................................................
07. ....................................................
08. ....................................................
09. ....................................................
10. ....................................................

**இவ்வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி அனுப்பி வையுங்கள். விடைகள் எமக்கு கிடைக்க வேண்டிய இறுதிநாள் மே 31. 2022. அனுப்புவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.**

## போட்டி இல:30 விடைகள்

01. 18
02. இளங்கோவடிகள்
03. அருச்சுனன், வீமன், நகுலன், தருமன், சகாதேவன்
04. திமிங்கிலம்
05. கனடா (ரஷ்யா பிரிவடைந்த பின்)
06. நரேந்திரமோடி
07. ஏப்ரல்-02
08. 1981
09. ஜெசிக்கா ஹொக்ஸ்
10. 1956 ஆம் ஆண்டு கைதடி (நவீல்ட் பாடசாலை)

1. முழுப் பெயர் : ....................................................
2. தபால் முகவரி : ....................................................
....................................................
3. தொலைபேசி இல. : ....................................................
4. பிறந்த ஆண்டு/மாதம்/திகதி : ....................................................




**அனுப்ப வேண்டிய முகவரி:** எழுதுங்கள்: வெல்லுங்கள்
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்.
இல: 290. பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு. நீர்வேலி.

**அன்பார்ந்த வலு வாசகர்களே!**

இன்றைய கொவிட் பெருந்தொற்று இடர்காலத்திலும் வலு தொடர்ச்சியாக வெளிவருகிறது என்பதனை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். தொடர்ந்து வரும் காலங்களில் 'வலு' உரிய காலத்திலேயே உங்கள் கரங்களில் தவழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

## எவர் எப்படி நடந்து கொண்டாலும் எமது பாதையில் மனவுறுதியுடன் செல்வதே எமக்கு முன்னேற்றத்தைத் தரும்....

இந்த இதழின் முற்றத்து மல்லிகையாக மணம் பரப்புபவர்
**ஆறுமுகம் பரமேஸ்வரன்**



எவர் எப்படி நடந்து கொண்டாலும் எமது பாதையில் மனவுறுதியுடன் செல்வதே எமக்கு முன்னேற்றத்தைத் தரும் என்பது எனது அனுபவ உண்மை.

எனக்கு 14 வயதுவரை சிறிதளவு பார்வை இருந்தது. பின்னர் முற்றாகவே இல்லாமல் போய்விட்டது சாதாரணமாக ஒருவர் பார்வையற்ற நிலையில் கல்வி கற்று இந்த நிலைக்கு வருவதென்றால் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பாரோ அதைவிடவும் பல மடங்குகள் நான் சிரமப்பட்டு இருக்கிறேன். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் சோர்ந்து விடவில்லை. வாழ்க்கையைச் சரி யான முறையில் திட்டமிட்டுக் கொண்டால் எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றை உடைத்துக்கொண்டு முன்னேறலாம். உண்மையாக, நேர்மையாக மனவுறுதி யோடு வாழ்க்கையில் உச்ச நிலையை அடைய வேண்டும் என நினைத்தால் என்னைத் தொடர்புகொள்ளுங்கள். அத்த கைய பாதைகளைத் தெரிந்து கொள்ளாமல் தான் இன்று பலர் தடுமாறிக் கொண்டிருக் கிறார்கள் - என்று சொல்கிறார் திரு. ஆறுமுகம் பரமேஸ்வரன்.

மாற்றுத் திறனாளியான திரு. ஆறுமுகம் பரமேஸ்வரனிடம் அவர் கடந்த காலம் பற்றியும் அவர் பெற்ற அனுபவம் பற்றியும் அவருடன் தொடர்ந்து பேசினோம். அவர் கீழ்க் காணும் வகையில் தனது கடந்தகால அனுபவத்தைச் சுருக்கிக் கொண்டார். அவரது உரையாடல் 'வலு' வாசகர்களை மேலும் வலுப்படுத்தும் என நாம் நம்புகிறோம்.

நான் தற்போது மீன்பாடும் தேன் நாடு என வர்ணிக்கப்படும் மட்டக்களப்பின் ஆரையம்பதி என்னும் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆரையம்பதியின் அயல் கிராமங்கள் அனைத்திலும் இஸ்லாமியர் வாழ்கின்றனர். இருந்தும் அதிக சைவக் கோயில்களைக் கொண்ட ஊராக ஆரையம் பதி விளங்குவது அதன் தனிச்சிறப்பு என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தனின் மணியோசை கேட்டு விழித்தெழும் ஊரான திருநெல்வேலி கிழக்கில் சட்டநாதர் கோயில் வீதிக்கு அருகாமையிலேயே எனது குழந்தைப் பருவத்தைக் கழித்தேன். எனது ஊரைப் பொறுத்தவரையில் கற்றோரும் விவசாயிகளும் வாழ்ந்து சிறப்பித்ததாக வரலாறு உண்டு. மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது சட்டநாதர் கோயில். அந்தக் கோயில் மூலவர் எங்கள் கிணற்றில்தான் தீர்த்தமாடியதாக எனது அம்மாவின் தாயார் தனது முன்னோர் கூறியதாக எனக்குச் சொல்லியுள்ளார்.

எனது தந்தையின் பிறப்பிடம் முள்ளியவளை. எனது தாயார் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவர். ஆரம்ப காலத்தில் எனது தந்தை சிறந்த வாகன சாரதியாக இருந்தார். பின்பு வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். எனது தாயார் நல்லதொரு குடும்ப நிர்வாகி. எனது பெற்றோர் அனைத்து மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தனர் என்றே கூறுவேன். நானும் எனது சகோதரனும் கண் பார்வையற்றவர்கள். இருந்தும் அவர்கள் எம்மை எப்போதும் குறைவாக நடத்தியதில்லை. எம்முடன் மனம் நோகும்படியாகக் கதைத்ததும் இல்லை. முடிந்தவரை எங்கள் பார்வையை மீட்டெடுக்கப் பாடுபட்டனர். முடியாமற் போகவே கல்வி கற்க வைத்தனர்.

**உங்கள் கல்விக் காலம் பற்றி...**

1979 இல் எனக்கு வயது 14. எனது ஆரம்பக் கல்வியை கைதடி நபீல்ட் பாடசாலையில் ஆரம்பித்தேன். பின்னர் 1993இல் ஆண்டு ஏழுக்காக யாழ்.இந்துக் கல்லூரியில் சேர்ந்தேன். க.பொ.த உயர்தர கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பெற்றேன். அதில் சித்தியடைந்து 1994ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள ஆரம்பித்தேன். 1995இல் சமூகவியல் பாடத்தைச் சிறப்புக் கற்கையாக எடுத்தேன். இருந்தாலும் அந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர வேண்டி ஏற்பட்டது. அதனால் எனது கல்வி இடைநிறுத்தப்பட்டது. தொடர்ந்து பல இடப்பெயர்வுகளின் பின்னர் மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் 1997ஆம் ஆண்டில் இணைந்து பொதுக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன். எனது கல்விப் பயணம் கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதையாகக் காணப்பட்டது.

1999ஆம் ஆண்டு எனது கல்வியை முடித்துக்கொண்டாலும் யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலை இருந்தது. அதனால் தெரிந்தவர்களின் அதீத முயற்சியால் 1999 இல் திருகோணமலையில் மாகாண சுகாதார அமைச்சில் ஒரு தொலைபேசி இயக்குநராகக் கடமையாற்றினேன். பின்னர் 2000ஆம் ஆண்டு திருகோணமலை கல்வியமைச்சில் கலாசார உத்தியோகத்தராக நியமனத்தைப் பெற்றுக் கொண்டேன். அங்கு சில மாதங்கள் கடமையாற்றிய பின் குச்சவெளி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றேன். பின் 2003 இல் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றேன். அதனால் நான் எனது குடும்பத்துடன் மனைவியின் ஊரான ஆரையம்பதிக்கே வந்துவிட்டேன். பின்னர் எனது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டமையால் 2008 தொடக்கம் எனது இருப்பிடத்திற்கு அண்மையிலுள்ள ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகிறேன்.

**உங்கள் கற்றல் காலத்து அனுபவம் பற்றி...**

1990ஆம் ஆண்டிலிருந்து 1995 வரையான காலத்தில் யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இருக்கவில்லை. அதுமட்டுமல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாதனங்கள், மின்கலங்கள் எதுவுமே இல்லை. அந்தக் காலத்தில் மின்சாரத்திற்காக மிதிவண்டி டைனமோவைத்தான் பயன்படுத்துவோம். தற்போது உள்ளதுபோல நவீன வசதிகளோ, உதவும் அமைப்புகளோ அப்போது இல்லை, பிரேயிலில் பாடக் குறிப்புகளை எடுப்பதானாலும் கையினால்தான் எழுத வேண்டும். எழுதும் கடதாசி கூட இருக்கவில்லை. நாட்டின் சூழலும் சாதகமாக இல்லை என்பதால் போக்குவரத்து வசதிகளும் அவ்வளவாக இல்லை. தற்போது இவற்றையெல்லாம் சொல்வதற்கும் கேட்பதற்கும் சாதாரணமாக இருந்தாலும் அவற்றை அனுபவித்த எங்களுக்குத்தான் அதன் வலி தெரியும். பார்வையற்றவர்கள் கல்வி கற்காவிட்டால் உயர் நிலைக்கு வருவது கடினம் என்பதை நான் உணர்ந்திருந்தேன். அதனால் எந்த இடர்பாடுகள் வந்த போதும் மனம் சோர்ந்துவிடவில்லை. எழுதுவதற்குரிய கடதாசிகள் கிடைக்காத போது கிடைத்த பழைய கடதாசிகளில் எழுதினேன். கல்விக்காக மிக நீண்ட தூரம் நடந்தேன். மின்சாரம் இல்லாதபோது பாடக் குறிப்புகளைக் கேட்பதற்காக உடல் வலியையும் பொருட்படுத்தாது சைக்கிள் டைனமோவைச் சுற்றினேன். கல்வி என்ற ஒரு இலக்கே எனக்கு முக்கியமாக இருந்ததால் அனைத்துச் சவால்களையும் எதிர் கொண்டு என்னால் சமாளிக்கக்கூடியதாக இருந்தது.

**உங்கள் திருமண வாழ்க்கை பற்றி...**

எனது திருமணம் 2001ஆம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்றது. எனது மனைவி மட்டக்களப்பைச் சேர்ந்தவர். நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருந்த போதும் என்னை விரும்பியே திருமணம் செய்து கொண்டார். நான் படித்துத் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும்வரை திருமணம்பற்றிச் சிந்திக்கவேயில்லை.



மனைவி அரச தொழில் எதுவும் செய்யாவிட்டாலும் எனது அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

எனக்கு இரு பிள்ளைகள். மூத்த மகள் 2020 இல் நடைபெற்ற உயர்தர பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். மகன் மட்டு. சிவானந்தா தேசிய பாடசாலையில் 10ஆம் ஆண்டில் கல்வி கற்கிறார். பெண்ணும் ஆணுமாக இரு குழந்தைகள் உள்ளனர். மனைவியும் பிள்ளைகளும் எனக்கு மிகவும் உதவியாகவே உள்ளனர். ஏறத்தாழ 16 ஆண்டுகளாக நோய்வாய்ப் பட்டிருக்கிறேன். மருந்துகள் எடுத்துத் தருவதில் இருந்து எல்லா வேலைகளையும் எனது மனைவிதான் செய்து வருகின்றார்.

பார்வையற்றவர்களைப் பொறுத்தவரை அவர்களால் ஆசிரியத் தொழிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு செய்யக்கூடியதாக இருக்கும். அரச அலுவலகங்களில் பணியாற்றுவது என்பது சற்றுச் சிரமமானது. முதலில் ஒரு களப் பணியாளராகவே நியமனத்தைப் பெற்றுக் கொண்டேன். அதில் இடர்பாடுகள் அதிகம். எனது ஆரம்ப நியமனத்தைப் பெற்றுத் திருகோணமலை கல்வி அமைச்சுக்குச் சென்றபோது சில மனிதாபிமானமற்ற அதிகாரிகளால் சிரமப்பட்டேன். பின்னர் குச்சவெளிப் பிரதேச செயலகத்திற்குச் சென்றபோதும் பின்தங்கிய இடமாக இருந்ததால் வெளியில் சென்று மக்களைச் சந்திப்பது சிரமமாக இருந்தது. பின் மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றபோது நான் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டேன். அந்த இடமும் மிகவும் பின்தங்கிய ஆபத்தான இடமாகவே இருந்தது. அங்கும் சில உயர் அதிகாரிகள் எனது மனம் புண்படும் வகையில் என்னை நடத்தினர்.

பார்வையற்றவர்களைப் பொறுத்த வரையில் அலுவலக வேலை என்று செல்லும்போது கோப்புக்களில் தகவல்களை எடுப்பது, அவற்றை உரிய இடத்தில் கொடுப்பது, வெளியில் சென்று கடமையாற்றுவது போன்ற சில வேலைகள் சற்றுச் சிரமம் என்பதை அதிகாரிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

**தற்போதைய சமூக மாற்றங்கள் பற்றி உங்கள் அனுபவம்...**

நான் சிறுபராயத்தில் இருந்ததை விட சமூகத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இருந்தாலும் இன்றும் சமூகத்திலுள்ள பலர் பிற்போக்கு எண்ணங்களைக் கொண்டவர்களாகவே உள்ளனர். பொதுவாக மாற்றுத் திறனாளிகள் அதுவும் குறிப்பாகப் பார்வையற்றவர்களை ஒரு தொழிலுக்கென்று நியமிக்கபடும்போது முதலில் அவர்களை வித்தியாசமாகப் பார்ப்பதைச் சமூகம் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவர்களின் திறமை எத்தகையது என அறிந்து, இனம் கண்டு அவர்களுக்குத் தகுந்த வேலையை அவர்களிடம் ஒப்படைத்தால் அவர்கள் சிறப்பாகச் செய்வார்கள். பார்வையற்றவர்கள் சாதாரண மனிதர்களைப்போலத் தமது அன்றாடக் கடமைகளைச் சுயமாகவும் இயலபாகவும் செய்வார்கள் என்ற உண்மையைக் கூட எமது சமூகத்தில் இன்னமும் பலர் அறியாமல் இருப்பது வருத்தத்துக்குரியது. இந்த நிலை மாற வேண்டும்.


**நீங்கள் சமூகத்துக்குச் சொல்ல, செய்ய விரும்புவது என்ன?**

சமூகத்தில் நானும் ஓர் அங்கம் என்ற வகையில் சமூகத்திற்கு நான் செய்ய விரும்புவது எமது மக்களில் பலர் இன்று மன அழுத்தம் உடையவர்களாகவும் தற்கொலை முயற்சியுடையவர்களாகவும் உள்ளனர். மனச்சிதைவால் அழுது கொண்டிருக்கும் பல முகங்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பது எனது ஆசை; அதுமட்டுமன்றி, இசைக்குழு ஒன்றை அமைத்துப் புதிய திறமையாளர்களை அறிமுகப்படுத்துகின்ற அதேவேளை இசை மூலம் நோய்களைத் தீர்க்கலாம் என்ற உண்மையைச் சமூகத்திற்கு விளங்க வைக்க வேண்டும் என்பதுவும் எனது நோக்கமாக உள்ளது. சமூகத்தில் இருந்து நான் எதிர்பார்ப்பது என்னவென்றால் என்னைப் போன்ற மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் குறிக்கோள் நிறைவேற உதவ வேண்டும் என்பதாகும்.

என்னைப் போன்ற மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்த வலுவான விடயங்களை வெளிக்கொண்டுவரும் 'வலு' சஞ்சிகைக்காக என்னைச் செவ்வி கண்ட சஞ்சிகைக் குழுவினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

# நவீன தொழில்நுட்பங்கள்

## தொலைபேசியின் நவீன தொழிநுட்ப மாற்றங்கள்

மனிதர்களின் தகவல் தொடர்பாடல் பரிமாற்றம் ஆரம்ப காலத்தில் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நடந்து சென்றே பாரிமாறப்பட்டது. பின்னாளில் விலங்குகள், மிதிவண்டி, வாகனங்களூடாக இத்தகவல் தொடர்பாடல் இடம்பெற்றது. இப்படியாக படிப்படியாக வளர்ச்சியடைந்த தகவல் தொடர்பாடல்துறை தொலைபேசி கண்டுபிடிப்பின் பின்னர் எழுச்சி பெற்றது. அது தற்போது கைபேசிகள் ஊடாக மிகப்பெரு வளர்ச்சியினை எட்டிப்பிடித்துவிட்டது.

அன்று கடிதங்களூடாக ஆமை வேகத்தில் நகர்ந்த தகவல் தொடர்பாடல் தொலைபேசி வருகையின் பின்னர் முயல் வேகத்திற்கு மாறியது. இது கைபேசி கண்டுபிடிப்புக்களின் பின்னர் மேலும் அதிக வேகம் கொண்டதாக மாற்றமடைந்தது. இதனூடாக தகவல்களை உரியவர்களிடம் உடனடியாகத் தெரிவிப்பது சாத்தியமானது. கைபேசிகளின் வருகை மனிதர்களுக்கிடையேயான தொடர்பாடலை இலகுபடுத்திய அதேவேளை மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் பாவனைக்கு வந்த கைபேசிகளை விடவும் தற்போது வந்துள்ள சீமாட் போன்கள் மற்றும் அதிலுள்ள வீடியோ அழைப்பு வசதிகள் சைகை மொழி பேசும் மாற்றுத்திறனாளிகளுக்கும் உதவுவனவாய் உள்ளன. இதனூடாக செவிப்புல மாற்றுத் திறனாளிகள் வீடியோ அழைப்புக்களூடாக சைகை மொழி மூலம் உரையா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். அத்துடன் பல இணையங்களுடாக சைகை மொழியினைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. ஸ்மாட் போன்களிலுள்ள Google maps தொழில்நுட்பம் இவர்களுக்கு அலுவலகங்கள், நிறுவனங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், பொது இடங்கள் போன்ற தேவையான இடங்களை அறியவும் அங்கு செல்லவும் பயனுடையதாகவுள்ளது. எனினும் சமூகத்தில் சைகை மொழி தெரியாதவர்களுடனான இவர்கள் தொடர்பாடல் இன்னும் முன்னேற்றம் காணப்பட வேண்டியுள்ளது. இதற்கு தொழிநுட்பங்களுக்கப்பால் தன்னார்வத்துடன் சமூகத்தினர் சைகை மொழியினை ஓரளவுவேனும் தெரிந்து கொள்ளுவதனூடாகத்தான் செவிப்புல மாற்றாற்றலுடையோர் தகவல் தொடர்பாடல் உயர்வடையும்.

பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு ஸ்மாட் போன் திரைகளைப் பார்ப்பதென்பது முடியாத விடயம். ஆயினும் தற்போது வந்துள்ள சில வகை சீமாட் போன்கள் மற்றும் மென்பொருட்கள் என்பன திரையிலுள்ள விடயங்களை வாசிக்கும் தன்மையினைக் கொண்டுள்ளன. இதனால் பார்வை மாற்றுத் திறனாளிகள் ஸ்மாட் போன்களிலுள்ள பயன்களை அனுபவிக்கக் கூடியதாக உள்ளது.

பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான பல சிறப்பம்சங்களுடன் தற்பொழுது சாதாரண கைபேசி ஒன்று, பாவனைக்கு வந்துள்ளது. சீன நாட்டுத் தயாரிப்பான இக் கைபேசி பார்வையற்றோர் பாவனைக்கு உகந்த பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

❖ **Titel IT 5260**
**இக் கைபேசியிலுள்ள சிறப்பம்சங்கள்.**

- இதிலுள்ள மென்பொருள் பட்டியலில் உள்ளவற்றை (manu) ஆங்கில மொழி மூலம் வாசிக்கின்றது.
- இலக்கங்களை அழுத்தும்பொழுது ஆங்கிலத்தில் சொல்லும்.
- சேமித்துள்ள (Save)பெயர்கள், போன் எண்கள் என்பனவற்றை ஆங்கிலத்தில் வாசிக்கும்.
- ஆங்கில மொழிமூலமான குறுந் தகவல்களை (Messages) வாசிக்கும். -
- உள்வரும் அழைப்புக்களைத் தெரிவிக்கும்.
- பேசும் கடிகாரம்.
- FM ரேடியோ.
- சாதாரண போனிலுள்ள மெனுக்கள்

இக்கைபேசியிலுள்ள தொழில்நுட்ப வசதிப்படுத்தல்கள் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்குப் பயன் தரக்கூடியனவாய் உள்ளது. இதனூடாக இவர்கள் பிறரின் உதவியின்றி சுயமாகக் கைபேசியிலுள்ள பயன்களை அனுபவிக்க முடிந்துள்ளது. எனினும் சீமாட் போன்களிலுள்ள பல அனுகூலங்களை இவர்கள் அனுபவிப்பதற்கு இன்னும் தொழிநுட்ப வளர்ச்சி தேவைப்படுகின்றது. எனினும் தற்போதுள்ள பல ஸ்மாட் போன்களில் காணப்படும் மென்பொருள் அல்லது அதில் பதிவிறக்கி பயன்படுத்தக்கூடிய சில மென்பொருட்கள் திரையிலுள்ள விடயங்களை வாசிக்கக் கூடியவை. இதனூடாக இணையத்தில் பார்வை மாற்றுத் திறனாளிகளும் தமக்கான விடயங்களினைத் தேடிப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனினும் இவ்வசதியினைப் பெற்றுக் கொள்வதில் சில பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கு முடியாதுள்ளது. இதற்குக் காரணம் இவர்கள் இது தொடர்பான விடயங்களைக் கற்பதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் வசதியின்மைகள் எனவே, தொழிநுட்பம் வளர்ச்சியடைந்த அதே வேளை பார்வை மாற்றுத் திறனாளிகளும் இத்துறைசார் அறிவினை அதிகமாக பெற்றுக் கொள்ளும்பொழுதே இவர்கள் இன்றைய நவீன தொழிநுட்ப மாற்றங்களை முழுமையாக அனுபவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி சு.சிவராசா,
சாவகச்சேரி.



# தரை இறங்குகின்ற புறாக்கள்

அன்றைக்குத் திங்கட்கிழமை. பாடசாலை நாள். அநேகமான பிள்ளைகள் பாடசாலைக்குப் போயிருப்பார்கள். கண்ணனும் ரூபனும் சாந்தனும் அந்த ஒழுங்கையில் நிற்கிறார்கள். பிரதான பாதையிலிருந்து அந்தக் கை ஒழுங்கை அவர்கள் வீட்டில் வந்து முடிகிறது. நேரம் காலை ஒன்பது மணியிருக்கும். மேலே வானத்தில் இரண்டு மூன்று புறாக்கள் வட்டமடிக்கின்றன. சாந்தன் தான் முதலில் அவற்றைக் கண்டவன். இவன் தான் கடைக்குட்டிப் பையன். இவனுக்குப் பத்து வயது இருக்கும்; அவன் கத்தினான்.

"டேய் அண்ணை அங்க பாரடா' புறாக்கள் ரவுண்டடிக்குது. அந்த சொக்கிளேற்றப் பார், உது கரணம் தான்... உவர இறக்க வேணுமடா"


சொக்கிளேற் நிறத்திலுள்ளது; இந்த மலைப்புறா பறந்த படியே திடீரென்று கீழே கரணம் அடிக்கக் கூடியது. அதனால் அதை சொக்கிளேற் கரணம் என்றான். வன்னியில் பலர் இந்த மலைப்புறாக்களை வீட்டில் வளர்ப்பார்கள். அவற்றின் குணநிற விசேடங்களுக்கு ஏற்ப பெயர்கள் இடப்படும். தலையில் கொண்டையுள்ளது. கொண்டைப்புறா, முழுவதும் கறுப்பு உடலும், இறக்கையின் ஓரங்கள் வெள்ளையாகவும் இருந்தால் கரவெள்ளை. காட்டுப்புறா மாதிரி வெள்ளைப் புள்ளிகளுடன் இருந்தால் அது பூச்சி. வாலை விரித்தபடி வட்டமிடுவது பான்றில்; மற்றப் புறாக்களை மறித்து, சுழித்துச் சுழித்து பறப்பது சுழியன். இப்படி இன்னும் எத்தனையோ அடையாளப் பெயர்கள் அவற்றிக்கு உண்டு.

புறாக்களைக் கண்ட மகிழ்ச்சியில் கண்ணன் 'சட்சட் சடசட' என்று இரட்டைக்கிளவியில் சுதியும் லயமும் பிசகாமல் கைகளைத் தட்ட ஆரம்பிக்க இதற்கு ஒத்துப் போகிற மாதிரி ரூபன் விசில் அடித்தான். அண்ணனோடு சேர்ந்து சாந்தனும் வாயால் ஒருவிதமான சத்தத்தைக் கிளப்பினான். புறாக்கள் தமது வட்டத்தைப் படிப்படியாகச் சிறிதாக்கிக் கொண்டு வந்தன. ரூபன் கண்ணனிடம் கேட்டான்.

"எங்கட பூச்சிய எறிவமாடா? அது கட்டாயம் உவையளை இறக்கித் தரும். ரூபனுக்கு கண்ணன் அனுமதி கொடுத்தான். பூச்சி மேலே போனது. வட்டமிட்ட புறாக்கள் இரண்டும் கீழே இறங்கின. என்ன மந்திரமோ! மாயமோ மெள்ள விசில் அடித்துக் கொண்டு கண்ணன் புறாக்களை நெருங்கி லாவகமாக பிடித்து விட்டான். இந்த மூன்று பிள்ளைகளும் வடிவேலுவின் வாரிசுகள். வடிவேலு வன்னிக்குச் சொந்தக்காரனல்ல. அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருகோணமலையிலிருந்து இங்கு வந்தவர். இந்திய இராணுவம் இலங்கையை விட்டுப் போன பின் திருகோணமலையில் கெடுபிடிகள் முனைப்புப் பெற்றன. தாக்குப் பிடிக்க முடியாத தமிழர்கள் கொடியும் கிளையுமாக அங்கிருந்து இடம்பெயர்ந்தனர்.

வடிவேலு தொண்ணூறாம் ஆண்டு மனைவி சாரதாவையும் மூன்று பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வன்னிக்கு வந்தார். வற்றாப்பளையில் ஒரு குடிசை வீடு போட்டுக் கொண்டனர். இடம்பெயர்ந்தோர் நிவாரணத்துக்கும் பதிவு நடந்தது. புதிய இடத்தில் புதிய வாழ்க்கையை எப்படி ஆரம்பிப்பது என்று தடுமாறினார்.

வடிவேலுவுக்கு தெரிந்ததெல்லாம் சுமாரான தச்சுத் தொழில்தான். தனியாக ஒரு வேலையைச் செய்து முடிக்கும் அளவிற்குத் திறமையில்லை. ஊரில் என்றால் வயலோடும் பட்டிமாடுகளோடும் காலத்தைப் போக்கி விடலாம். இங்கே அந்த வாழ்க்கை கிடையவே கிடையாது.

பல தொகுதிகளுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்தபின்னர் நிராகரிக்கப்பட்டு நிர்க்கதியாய் நின்ற அரசியல்வாதியை போல் வடிவேலு செய்வதறியமால் முழித்தார். எந்த வேலையாவது செய்தால்தான் வாழ்க்கை ஓடும் என்ற நிலைமை வந்தபோது சாரதாவும் வெளியே கிளம்பி விட்டாள். வீடுகளில் குத்தி இடிக்கிற வேலை செய்யத் தொடங்கினாள். பிள்ளைகள் என்ன செய்வார்கள். அப்போது சாந்தன் கைக்குழந்தை. வடிவேலுக்கு சில நாட்களில் மட்டும் ஏதோ வேலை கிடைக்கும். சீனாவின் போர் விமானத்துடன் மோதிய அமெரிக்க வேவு விமானம்போல் மாலையில் நிலைகுலைந்து போவார். உடல் வருத்தமும், உளவருத்தமும் ஒன்றாகச் சேர்ந்து அவரை வாட்டி எடுக்கும்.


அமெரிக்க விமானம் சீனத்தளத்தில் இறங்கியது. வடிவேலு தவறணையில் இறங்கினார்.

சுண்டங்காய் கால்ப் பணம் சுமைகூலி முக்காப்பணம் என்று ஆகிவிட்டது. இரண்டு பக்கமும் அடிவாங்க மத்தளம் பழகிக் கொள்வதைப்போல் சாரதாவும் காலப்போக்கில் பழகிக் கொண்டாள். வெளியே எதையும் காட்டிக் கொள்வதில்லை. அவளது உள்மனம் அடிக்கடி நொருங்கிக் கொண்டிருந்தது.

காலக்குதிரை கடிவாளத்துக்குக் கட்டுப்படாது. இந்த பதினொரு வருடங்கள் எப்படியோ உருண்டு முடிந்தன. பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள். கண்ணன் பள்ளிக்கூடத்தை முழுமையாகவே விட்டுவிட்டான். இதனால் தம்பிகளும் அண்ணன் வழியில் நடக்கத் தொடங்கி விட்டார்கள். புறா வளர்ப்பதுதான் அவர்களின் முழு நேர வேலையாகி விட்டது. சில வேளைகளில் புறா விற்ற பணந்தான் அவர்கள் வயிற்றுக்குச் சாப்பாடு போடுகிறது. ஒரு சோடிப் புறா நூறு ரூபாய் வரை விலை போகிறது.

இன்றைக்கு இரண்டு புறாக்களை இறக்கி விட்டார்கள். மாமுலைப் பக்கம் இருந்துதான் அவை வந்திருக்க வேண்டும் என்பது கண்ணனுக்கு தெரியும். தான் பழகியிருக்கும் தொழில்நுட்பக் கணக்கில் அவனது மூளை ஐன்ஸ்ரீனின் மூளையை விடத் துல்லியமாகக் கணக்குப் போடும். நீராவிப்பிட்டியில் இருக்கிற ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவனிடம் சொக்கிளேற் கொண்டைக்கு சொல்லியிருந்தது சட்டென்று ஞாபகம் வந்தது. எப்படியும் புறாச் சொந்தக்காரன் மாமூலையிலிருந்து வருவதற்கிடையில் இறக்கிய சோடிப் புறாக்களை நீராவிப்பிட்டிக்கு கடத்தி விட வேண்டும்.

விசயம் வெளியே வராது என்ற நம்பிக்கையில்தான் கண்ணனும் வேக வேகமாகப் புறாக்களை நீராவிப்பிட்டிக்கு கடத்தி விட்டான். ஐம்பது ரூபாய் தேறியது சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்தால் எதிர்பாராத இலாபம் தானே. ஐம்பது ரூபாயோடு கண்ணன் வீடு வந்தான். அன்று வேலை எதுவும் அகப்படாததால் வடிவேலுவும் திரும்பி வந்தார். மா இடிக்கப் போன வீட்டில் சாரதாவை நாளைக்கு வரசொல்லி திருப்பி விட்டார்கள். இன்றைக்கு இந்த ஐம்பது ரூபாய்தான் அவர்களுக்கு கைகொடுக்கப் போகிறது. காசு அம்மாவின் கைக்கு மாறியது. பையை எடுத்துக்கொண்டு சாரதா கடைக்குப் புறப்பட்டாள். வாசலில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. இரண்டு இளந்தாரிப் பெடியள் அதிலிருந்து இறங்கினார்கள். அவர்களுக்கும் கண்ணனின் வயதுதான் இருக்கும் ஒருவன் சாரதாவிடம் கேட்டான்.

"அம்மா கண்ணன் நிக்கிறனா? ஒரு விசயம் கதைக்க வேணும்" வீட்டுத் திண்ணையில் குந்தியிருந்த மகனைச் சாரதா திரும்பிப் பார்த்தாள். வந்தவனைப் பார்த்ததுமே கண்ணனுக்கு விசயம் விளங்கி விட்டது. கண்ணனிடம் புறா வாங்கிய நீராவிப்பிட்டிப் பெடியன் அவன்தான். புறாவின் சொந்தக்காரனான மாமூலைப் பெடியன் இவனது கூட்டாளி மாமூலைக்காரன் தனது நீராவிப்பிட்டி நண்பனிடம் போன இடத்தில்தான் புதிதாக வாங்கிய சொக்கிளேற்றுக் கொண்டையை பெருமையோடு தனது நண்பனுக்குக் காட்டியிருக்கிறான். பிறகு என்ன? அப்பம் என்றால் புட்டுக்காட்டத் தேவையில்லையே அதுதான் இருவரும் கண்ணனிடம் வந்து விட்டார்கள்.

கண்ணனின் களவு பிடிபடவே ஐம்பது ரூபாய் நீராவிப்பிட்டியானுக்குக் கைமாறியது. சாரதா நிலைமையைச் சமாளித்து வந்தவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பினாள். ஜனாதிபதி தேர்தல் முடிவு இழுபறியான போது இறுதிவரை காத்திருந்து ஏமாந்து போன ட்ரம்மைப் போல வடிவேலுவும் இன்றைய பொழுதைச் சரிக்கட்டிவிடலாமென எதிர்பார்த்து ஏமாந்து போனார். நேற்று உழைத்த நூறு ரூபாவையும் தவறணையில் கொடுத்து விட்டல்லவா வந்திருக்கிறார். இப்போது என்ன செய்வது என்று முழிக்கிறார். கிடைத்த நூறு ரூபாயில் தண்ணி அடித்த வடிவேலு இப்போது சாப்பாட்டுக்கு வழிதெரியாமல் தவிக்கிறார். இதோடாவது வடிவேலு திருந்தியாக வேண்டும். பிள்ளைகளும் உருப்படுகின்ற வழியைப் பார்க்க வேண்டும்.

எல்லாம் சாரதாவின் கையில் தான் இருக்கிறது. அவள் என்ன செய்வாள். இவர்களது வாழ்க்கை காலனிட்ட கட்டளைப்படிதான் போக முடியும். இப்படி எத்தனையோ வடிவேலுகளும் சாரதாக்களும் நம் பிரதேசங்களில் வாடி காய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இவர்களின் வாரிசுகள் இனி எங்கே போவார்கள்? என்ன செய்வார்கள்? வினை விதைத்தவர்கள் அந்த அறுவடையும் ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழ் தொடர்ச்சி

# கனவுகள் காணும் மௌன மொழி!

## காது கேளாதோரைப் புரிந்து கொள்ளுதல்

கேட்டல் மாற்றாற்றலுடைய பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களான பிறகு பெற்றோரிடமிருந்து தாங்கள் எதிர்பார்ப்பது அவர்கள் தங்களோடு பேச வேண்டும் என்று சொல்கின்றனர். ஜாக் என்பவர் கேட்டல் மாற்றாற்றலுடையவர். அவரது வயதான அம்மா மரணப் படுக்கையில் இருந்தபோது அவரோடு பேச முயன்றார். மகனிடம் ஏதோ சொல்ல வேண்டுமென்று துடித்தார். ஆனால் அதை எழுதிக் காண்பிக்க முடியவில்லை. சைகை மொழியும் அவருக்குத் தெரியவில்லை. அதன் பின் கோமா நிலைக்குச் சென்று விட்டார். உயிரும் பிரிந்தது. அந்தக் கடைசி விநாடிகளை நினைத்து ஜாக் வேதனையில் வெம்புகிறார். தன் அனுபவம் ஒரு நல்ல பாடம் கற்பிக்கிறது என கேட்டல் மாற்றாற்றலுடையப் பிள்ளைகளின் பெற்றோர்களுக்குச் சொல்கிறார். கேட்டல் மாற்றாற்றலுடைய உங்கள் பிள்ளையோடு சரளமாகத் தொடர்பு கொண்டு கருத்துகளை, உணர்ச்சிகளை, எண்ணங்களை, அன்பை அர்த்தத்தோடு பரிமாறிக் கொள்ள வேண்டுமென்றால், சைகை செய்யுங்கள். எனக்குத்தான் அந்தக் கொடுப்பினை இல்லாமல் போய்விட்டது. உங்களுக்கும் காலம் கடந்து விட்டதா என்ன?

பல வருடங்களாகவே, கேட்டல் மாற்றாற்றலுடையோர் பெற்றிருக்கும் அனுபவத்தை அநேகர் தவறாக எடை போட்டிருக்கிறார்கள். அவர்களால் எதையும் கேட்க முடியாதென்பதால் அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது எனச் சிலர் நினைக்கின்றனர். பெற்றோர்கள் அவர்களை பொத்திப்பொத்தி வளர்க்கின்றனர். அல்லது மற்றவர்களோடு சகஜமாகப் பழக விடுவதற்குப் பயப்படுகின்றனர். பொதுவாகக் கேட்டல் மாற்றாற்றலுடையோர் பேசுத்திறன் இழந்தவர்கள் அல்ல என்றாலும் சில இடங்களில் 'ஊமைகள்' எனத் தவறாக அழைக்கப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களால் கேட்க மட்டும்தான் முடியாது. இன்னும் சிலர் சைகை மொழி பழங்காலத் தது. பேசும் மொழியளவு தரமானதல்ல என நினைக்கின்றனர். இப்படிப்பட்ட அறியாமையினால் கேட்டல் மாற்றுத்றலுடையவர்கள் சிலர் ஒடுக்கப்படுவதாகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவதாகவும் நினைப்பதில் ஆச்சரியமில்லை.

ஜோசப் அமெரிக்காவில் வளர்ந்தவர். 1930 களில் அவர் சிறுபிள்ளையாக இருந்த போது கேட்டல் மாற்றாற்றல் உடைய பள்ளியில் சேர்ந்தார். அப்பள்ளியில் சைகை மொழிக்குத் தடை இருந்தது. அவரும் அவரது வகுப்பு மாணவர்களும் சைகை பயன்படுத்தியபோது தண்டிக்கப்பட்டனர். தங்கள் ஆசிரியர்கள் சொல்வது புரியாதபோது கூட அவர்களுக்குச் சைகை செய்ய அனுமதியில்லை. புரிந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் எப்படித் துடியாய் துடித்திருப்பார்கள். சில நாடுகளில் கேட்டல் மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகளுக்கான கல்வி வாய்ப்புகள் குறைவு, ஆகவே சிலர் மிகக் குறைவான கல்வியையே பயில்கின்றனர். உதாரணத்திற்கு மேற்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த விழித்தெழு! நிருபர் இப்படிச் சொன்னார். “ஆபிரிக்காவிலுள்ள பெரும்பாலான கேட்டல் மாற்றாற்றலுடையோரின் வாழ்க்கை கஷ்டம் நிறைந்தது; கொடுமையானது. ஊனமுற்றோர் பட்டியலில் அதிகளவில் ஓரங் கட்டப்படுபவர்களும் சிறிதும் புரிந்து கொள்ளப்படாதவர்களும் கேட்டல் மாற்றுத் திறனாளிகள்”

நம்மைப் புரிந்துகொள்ள வேண்டும் என நாம் அனைவருமே விரும்புவோம். அது தேவையும் கூட. தேவையான விஷயம் என்னவென்றால் சிலர் கேட்டல் மாற்றுத் திறனாளரைப் பார்க்கும் போதே எதுவும் முடியாதவர்கள் என்று தீர்மானித்து விடுகின்றார்கள். நாம் காணும் குறைகள், அவர்களுக்கிருக்கும் உண்மையான திறமைகளையெல்லாம் இது மறைத்து விடும். உண்மையில் பார்த்தால் அநேக கேட்டல் மாற்றுத் திறனாளிகள் தங்களால் சாதிக்க முடியும் என்றே நினைக்கின்றனர். ஒருவரோடு ஒருவர் சரளமாக பேசுவதிலும் சுயமதிப்பை வளர்த்துக் கொள்வதிலும் படிப்பிலும் சமூக மற்றும் ஆன்மீக வாழ்வில் தேர்ச்சி பெறுவதிலும் இவர்கள் சலித்தவர்களே அல்லர். மக்கள் மாற்றுத் திறனாளர் கலாசாரத்தையும் சகஜமான சைகை மொழியையும் புரிந்து கொள்வதில் உண்மையான ஆர்வம் காட்டி அவர்களும் சாதிக்க பிறந்தவர்களே எனக் கருதினால் அனைவர் வாழ்வும் நன்மை பெறும்.

நாம் எவ்வாறு யோசிக்கிறோம்? எவ்வாறு கருத்துக்களை உருவாக்கின்றோம்? என்பவற்றைக் காட்டுவதே மொழி. நீங்கள் சைகை மொழியை நன்கு கற்றுக் கொள்ள வேண்டுமென்றால் நீங்கள் அந்த மொழியிலேயே யோசிக்க வேண்டும். அப்போது தான் அம்மொழியில் உண்மையிலேயே தேற முடியும். வெறுமனே சைகை மொழி அகராதியிலிருந்து சைகைகளைக் கற்றுக் கொள்வது போதாது. அன்றாட வாழ்வில் சைகை மொழியைப் பயன்படுத்தும் கேட்டல் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து அதைக் கற்றுக் கொள்ளக்கூடாது? சைகை மொழியையே சொந்த மொழியாகக் கொண்டவர்களிடமிருந்து கற்றுக் கொள்வது வித்தியாசமானது. அதேசமயம் சரளமாக யோசிப்பதற்கும் கருத்துக்களை உருவாக்குவதற்கும் உங்களுக்கு உதவும்.

உலகெங்கும் கேட்டல் மாற்றுத் திறனாளிகள் விநோதமான விதவிதமான சைகை மொழியைப் பயன்படுத்துவதன் மூலம் தங்கள் அனுபவ எல்லையை விரிவாக்கிக் கொண்டே செல்கின்றனர். அவர்களது மௌனமொழியின் சங்கீதங்களை நீங்கள் நன்கு கவனித்துப் பாருங்கள்.

**நன்றி: ஆதாரம்: உவாட்ச்டவர்**
**ஆன்லைன் லைப்ரரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org